# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 15.11.2021 supeedsam.com supeedsam@gmail.com







# தமிழ் பேசும் கட்சிகளை ஒரு தளத்தில் அணி திரட்ட சம்பந்தன் தீர்மானம்

(ராஜ்)

தமிழ் பேசும் கட்சிகளை ஒரு தளத்தில் அணி திரட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தீர்மானித்துள்ளார்.

புதிய அரசியலமைப்புக்கான வரவொன்று இந்த ஆண்டு இறுதிக்குள் வரவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே கூறியுள்ள நிலையில், அது பற்றி விசேட கரிசனை கொள்ளப்பட வேண்டும் என இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...



## சர்வதேசத்தைத் திசை திருப்பவே 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

சர்வதேசத்தைத் திசைதிருப்புவதற்காக ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே வரவு, செலவுத்திட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கென நிதியொதுக்கப்பட்டுள்ளமையைப் பார்க்கின்றோம் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாவதி தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதும் எமக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதுமே எமது

02 ஆம் பக்கத்தில்...

## சீனா, இந்தியா,அமெரிக்காவின் பலத்தை நிரூபிக்கும் தளமாக இலங்கை மாற்றம்



(காந்தன்)

சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பலத்தை நிரூபிக்கும் தளமாக இலங்கை மாற்றப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறை

02 ஆம் பக்கத்தில்...

## யஸ்மின் சூக்காவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை



இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவு தலைவர் சுரேஷ் சாலி தாக்கல் செய்த அவதூறு மனுவின்கீழ், எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, தென்னாபிரிக்க மனித உரிமைகள் சட்டத்தரணி யஸ்மின் சூக்காவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மீண்டும் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட, ஏனைய இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராகவும் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மீண்டும் அறிவித்தலை விடுத்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## இன்று பாடசாலைகளில் வெள்ளைக் கொடி கட்டி அஞ்சலி செலுத்துமாறும் வேண்டுகோள்



(சுமன்)

தற்போது எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகக் கருதினாலும், வருகின்ற தை மாதம் எமது சம்பளம் அதிகரித்து வரும் வரை அரசாங்கத்தினால் தரப்பட்டுள்ள இந்த வாக்குறுதிகளை நூறு வீதம் நம்ப முடியாது என இலங்கை ஆசியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடந்த 09ம் திகதிய போராட்டத்தின் போது உயிர்நீத்த வருணி ஆசிரியைக்கு திங்கட்கிழமை பாடசாலைகளில் வெள்ளைக் கொடி கட்டி அஞ்சலி செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இன்றையதினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். இவ் ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் நீதிபதியாக ஒரேயொரு தமிழ்பெண்மணி தெரிவு இன்று பதவியேற்பு

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணஅம்பாறை மாவட்டத்தில் இம் முறை நீதிபதியாக ஒரேயொரு தமிழ் இளம் பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இன்று(15) அவர் திங்கட்கிழமை நீதிபதியாக சத்தியப்பிரமாணம் எடுக்கவுள்ளார் .

நீதிபதிகளுக்கான பதவி நியமன திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நேர்முக பரீட்சையிலும்

02 ஆம் பக்கத்தில்...



## ரி20 உலகக் கிண்ணத்தை வென்றது அவுஸ்திரேலியா




நியூசிலாந்து அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 2021 ரி20 உலகக்கிண்ணத்தை அவுஸ்திரேலியா அணி சுவீகரித்துள்ளது.

ரி20 உலகக்கிண்ண இறுதிப் போட்டி டுபாயில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்களின் திருநாளை ஒரு மதத்தவர்கள் எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

தமிழர்களின் திருநாளை ஒரு மதத்தவர்கள் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற யாழ் மாவட்ட ஓய்வுநிலை அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்களின் சேவை நயப்பு விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்து மக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக செயற்பட்டவர்கள் நாங்கள் படிக்கின்ற காலத்தில் கிறிஸ்தவ நண்பர்களோடு சேர்ந்து

02 ஆம் பக்கத்தில்...









## வடமாகாணத்தில் குற்றச்செயல்களை தடுக்க புதிய திட்டம்

(ஜுட்)

வடமாகாணத்தில் அதிகரிக்கும் குற்றச் செயல்களைத் தடுக்கும் விதமாக சமூக பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

ஆளுநர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்

02 ஆம் பக்கத்தில்...






## வாழ்வோரை வாழ்த்துவோம்: ஓய்வு பெறுகிறார் சீனக்குடா தமிழ் வித்தியாலய அதிபர் கனகசூரியம் யோகானந்தன்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



திருகோணமலை சீனக்குடா தமிழ் வித்தியாலய அதிபர் மதிப்புக்குரிய கனகசூரியம் யோகானந்தன் அவர்கள் 2021.11.11அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

அவர் கல்வித்துறையில் ஆற்றிய சேவைகளுக்காக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உபதவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்கள் பாடசாலைக்கு நேரில் சென்று மக்கள் சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

அவர் அதிபராக இருந்த சந்தர்ப்பத்தில் சீனக்குடா பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அவருடன் சேர்ந்து பணியாற்ற கிடைத்த அரிய வாய்ப்பினை இந்த சந்தர்ப்பத்தில் கௌரவ உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்கள் நினைவு கூர்ந்தார்.

அவருடைய அன்பான பேச்சும் இலக்கிய ஆளுமையும் நிர்வாக திறமைகளும் அவரையறிந்த அனைவரையும் போல தன்னையும் கவர்ந்ததாகவும் மதிப்புக்குரிய கனகசூரியம் யோகானந்தன் அதிபர் அவர்களுடைய ஓய்வு காலம் சிறப்பாக அமைய முழு மனதோடு பிரார்த்திப்பதுடன் இலக்கிய பரப்பில் அவர் இன்னும் பிரகாசிக்க தனது வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாகவும் இதன் போது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபை கௌரவ உபதவிசாளர் ஏ.எல். எம் நௌபர் அவர்கள் தெரிவித்தார்.

## 6 ஓவர் மேன்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் திருகோணமலை அலெக்ஸ் விளையாட்டு கழகம் வெற்றி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை எஹெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று ஏற்ப்பாடு செய்யப்பட்டிருந்தது

நேற்று 14). மெக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இவ் போட்டி இடம்பெற்றது

இவ் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி சமூக நல்லிணக்கத்தை ஏற்ப்படுத்தும் நோக்கில் 10 அணிகள் உள்வாங்கப்பட்டு போட்ட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இறுதிப் போட்டிக்கு லிவர்பூல் அணி மற்றும் அலெக்ஸ் அணியினர் தகுதி பெற்றதுடன் முதலில் துடுப்பெடுத்தாடிய லிவர்பூல் அணி 6ஓவர்களுக்கு 25 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

26 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அலெக்ஸ் அணியினர் மூன்று ஓவர் 4 பந்துகளில் வெற்றி இலக்கை அடைந்து வெற்றி வகை சூடினார்

இப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் எஹெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை டன்ஸ் பேட்ரிக் ஜோசப், டிக்கெட் கரிட்டா திட்ட உத்தியோகத்தர் எம் ஏ எம் நிஸ்மி மற்றும் திருகோணமலை யுனைட்டட் கிங்ஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் இப் போட்டித் தொடரை திருகோணமலை யுனைட்டட் கிங்ஸ் விளையாட்டுக்கழகம் ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## வடமாகாணத்தில் குற்றச்செயல்களை தடுக்க புதிய

இது தொடர்பில் தெரிவிக்கையில், வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் சமூக பொலிஸ் துறையினர் என்ற பெயரில் செயற்படவுள்ள இந்தத் திட்டத்தில் வேலையற்ற இளைஞர்கள் திறமை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தத் செயற்பாடு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் மேற்பார்வையின் கீழ், வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜகத் பலிஹக்காரவின் பணிப்புரையின் பேரில் செயல்படுத்தப்படுகின்றது.

இந்த அணிகளைத் தெரிவு செய்யுமாறு யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரி20 உலகக் கிண்ணத்தை வென்றது அவுஸ்திரேலியா

அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணியை அழைப்பு விடுத்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 85 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் ஹேசில்வுட் அதிகபட்சமாக மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 18.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றி கிண்ணத்தை தனதாக்கியது.

அவுஸ்திரேலியா அணி சார்பில் இறுதி வரை ஆட்டமிழக்காமல் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மிட்சல் மார்ஸ் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

6 நான்கு ஓட்டங்கள் மற்றும் 4 ஆறு ஓட்டங்கள் அடங்களாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

டேவிட் வோர்னர் 53 ஓட்டங்களையும் கிளேன் மெக்ஸ்வல் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணி பந்துவீச்சாளர் எவரும் பிரகாசிக்காத நிலையில் ட்ரன்ட் போல்ட் மாத்திரம் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதற்கமைய, ரி20 உலகக்கிண்ண வரலாற்றில் அவுஸ்திரேலியா அணி தனது முதலாவது உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் நீதிபதியாக ஒரேயொரு தமிழ்பெண்மணி

தெரிவு செய்யப்பட்டு திருமதி ஜெகநாதன் சுபராஜினி மிக இள வயதில் நீதிபதியாகின்றார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்திலிருந்து தெரிவான முதலாவது பெண்நீதிபதி திருமதி.ஜெகநாதன் சுபராஜினி என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், இவர் திருக்கோவில் மெதடிஸ்த தமிழ் மகாவித்தியாலயத்தில் க.பொ.த(சா/தர) வரை கற்று 9 பாடங்களிலும் அ சித்தி பெற்று, உயர்தரத்தில் கலைப் பிரிவை தெரிவு செய்தமை குறிப்பிடத்தக்கது

அவ்வகையில் க.பொ.த(சாதாரண தரப்) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் அதிதிறமை சித்திகள் பெற்று முதலிடம் க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் மூன்று அதிசிறந்த சித்திகள் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடம் பெற்றமை பின் பல்கலைக்கழகத்தில் சட்ட இளமானி பட்டத்திலும் உயர்வு சித்தி பெற்றமை மற்றும் தற்போது முதற்தடவையாக நீதிபதிப் பரீட்சைக்கு தோற்றி கிழக்கு மாகாணத்தில் சிறுவயதில் நீதிபதியாக தெரிவு செய்யப்பட்ட முதற் பெண்மணி என்ற பெருமையின் மகுடமும் திருமதி. ஜெகநாதன் சுபராஜினியே சாரும்.

ஓர் சாதனையை அடைவதற்கு சிறந்த வழிகாட்டி சிறந்த ஆசான் அவசியமாகும். அதனடிப்படையில் திருமதி ஜெகநாதன் சுபராஜினி இச்சாதனையை சுவைப்பதற்கு வழிகாட்டியாகவும் ஆசானாகவும் மட்டுமன்றி உற்ற துணையாகவும் அவரது கணவர் சிரேஷ்ட சட்டத்தரணி சொலிசிற்றர் மற்றும் பரீஸ்டர் சிந்தாத்துரை ஜெகநாதன் அமைந்தது ஒரு வரப்பிரசாதமாகும்.

இவ்விதம் தெரிவான நீதிபதி சுபராஜினியை பாராட்டி சமுகவலைத்தளங்களில் பரந்தளவில் பாராட்டுத்தெரிவிக்கப்பட்டுவருகிறது.

## சர்வதேசத்தைத் திசை திருப்பவே 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

ஒரேயொரு எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ஆனால் நாங்கள் தற்போதைய அரசாங்கத்திடமிருந்து அந்த நீதியைக்கூட எதிர்பார்க்கவில்லை. அவ்வாறிருக்கையில் நிதியை வழங்கி எமது வாயை அடைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் வெள்ளிக்கிழமை (12) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத்திட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கென 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து வினவியபோதே அவர் இவாறு தெரிவித்தார். காணாமலாக்கப்பட்ட எமது உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதும் எமக்கான நீதியைப் பெற்றுக்கொள்வதுமே எமது ஒரேயொரு தேவையாக இருக்கின்றது.

ஆனால் நாங்கள் தற்போதைய அரசாங்கத்திடமிருந்து அந்த நீதியைக்கூட எதிர்பார்க்கவில்லை. அவ்வாறிருக்கையில் நிதியை வழங்கி எமது வாயை அடைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதேவேளை வரவு, செலவுத்திட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான நட்டஈட்டை வழங்குவதற்கென நிதியொதுக்கப்பட்டிருப்பதாக சர்வதேசத்திடம் காண்பித்து, அவர்களிடமிருந்து அதற்குரிய நிதியைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## தமிழர்களின் திருநாளை ஒரு மதத்தவர்கள்

பழகி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். நான் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட போது என்னை முதன்முதலில் நேரடியாக வந்து வாழ்த்தியவர் தற்போது யாழ் மாவட்ட ஆயராக உள்ள ஜஸ்டின் ஞானப்பிரகாசம் அவர்களே அவ்வாறு நாங்கள் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம் ஆனால் தற்போது ஒரு பிரச்சனை காணப்படுகின்றது.

கிறிஸ்தவ மதத்தில் பல சபைகளை உருவாக்கி தமது மதத்துக்கு மதம் மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். வறிய நிலையிலுள்ள மக்களுக்கு பணத்தைக் கொடுத்து மதமாற்றம் செய்வதை முன்னெடுக்கிறார்கள் அது ஏற்கக் கூடிய ஒரு விடயமல்ல. நாங்கள் இந்துக்கள் எப்போதாவது எமது மதத்திற்கு மதம் மாற வேண்டும் என்று நாங்கள் எங்காவது கேட்டிருக்கின்றோமா நாங்கள் கேட்கமாட்டோம் .அதேபோலவே ஒட்டுமொத்த தமிழர்களின் திருநாளை ஏனைய மதத்தவர்களை புறந்தள்ளி விட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம்எவ்வாறு தீர்மானிக்க முடியும்?.

இந்துக்கள் கிறிஸ்தவ மக்களுக்கோ,கிறிஸ்தவ துறவிகளுக்கோ எதிரானவர்களல்ல நாங்கள் ஒற்றுமையாக செயற்பட்டு வருகின்றோம் இந்துக்களாகிய நாம் எந்த மதத்தவர்களோடும் சண்டை பிடிக்க போவதில்லை ஆனால் நமக்கு ஒரு தாக்கம் ஏற்படும் போது அதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாது தானே எனவும் தெரிவித்தார்.

## இன்று பாடசாலைகளில் வெள்ளைக் கொடி கட்டி அஞ்சலி செலுத்துமாறும்

மாவட்ட தலைவர் த.கோகுலறமணன், செயலாளர் கிருபைராஜா, மட்டக்களபப்பு வலய இணைப்பாளர் திருமதி த.தயானந்தி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதன் போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக அதிபர் ஆசிரியர்கள் ஒன்றிணைந்த வகையிலே 24 வருட சம்பள முரண்பாட்டினைத் தீர்க்கும் முகமாக பாரிய அளவிலான போராட்டங்களை ஆசிரியர் சங்கங்கள் முன்னெடுத்திருந்தோம். அதனடிப்படையில் தற்போது அரசாங்கம் ஒரு இணக்கப்பாட்டிற்குள் வந்திருக்கின்றது. சுபோதினி அறிக்கையின் பிரகாரம் முன்றில் ஒரு பங்கினைத் தருவதாக உறுதியளித்திருக்கின்றது.

அதனடிப்படையில் வழமையான வரவு செலவுத் திட்டத்தை விட முப்பதாயிரம் மில்லியன் மேலதிக தொகையை ஒதுக்கியிருக்கின்றது இந்த அரசாங்கம். சுபோதினி அறிக்கையின் பிரகாரமுள்ள மேலும் இரண்டு மடங்கினையும் எதிர்காலத்தில் தருவதாகவும் உறுதியளித்துள்ளது.

அன்பான அதிபர் ஆசிரியர்களே நீங்கள் இதுவரை எங்களுடன் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கியிருந்தீர்களோ, அதே போல் அரசாங்கத்தினால் தரப்பட்டுள்ள இந்த வாக்குறுதிகள் எதிர்காலத்தில் நிறைவேறாத சந்தார்ப்பத்தில் மீண்டும் போராடுவதற்கு எங்களோடு தொடர்ச்சியாகக் கைகோர்த்து நிற்க வேண்டும்.

நாங்கள் எதிர்பார்த்ததில் ஒரு பங்கினைத் தருவதாகவே உறுதியளிக்கப்பட்டுள்ளது. வருகின்ற காலத்தில் அது அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தை மாதம் எமது சம்பளம் அதிகரித்து வரும் வரை நாங்கள் எவ்வித தீர்மானமும் எடுக்க முடியாது, சொல்லப்பட்ட விடயத்தை நூறு வீதம் நம்பவும் முடியாது. தற்போது எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானமும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகவே நாங்கள் கருதுகின்றோம்.

நடைபெற்றுக் கொண்டிருந்த எமது போராட்டங்களின் கலந்து கொண்டிருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் அனைவருக்கும் நாங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, வடக்கு கிழக்கு மட்டுமல்லாது நாடுபூராகவும் மிகவும் நேர்த்தியாக எமது போராட்டங்களை வழிநடத்திய தலைமைகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். விசேடமாக எமது போராட்டங்களை வெளிப்படுத்திய ஊடகங்கள் ஊடகவியலாளர்களுக்கும் நாங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. சுபோதினி அறிக்கையை முன்வைத்து எமது போராட்டத்தை நாங்கள் மேலும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம். இதற்கு அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

போராடித்தான் எங்களது விடயத்தைப் பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டதன் விளைவாக எமது போராட்டங்கள் இடம்பெற்றன. போராடி வெற்றியும் கண்டிருக்கின்றோம். இந்தப் போராட்த்தில் இம்முறை பல பெண் ஆசிரியர்கள் முன்வந்து போராடினார்கள் என்பது குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அந்தவகையில், கடந்த 09ம் திகதி இடம்பெற்ற எமது பாரிய போராட்டத்திலே கலந்து கொண்டு தனது உயிரைத் தியாகம் செய்த ஏ.டி. வருணி அசங்க ஆசிரியையை நினைவு கூருவதுடன், அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அனைத்து ஆசிரியர்களின் அஞ்சலியையும் தலைவணங்கிச் செலுத்துகின்றோம்.

அத்துடன், வருகின்ற திங்கட்கிழமை 15ம் திகதி மட்டக்களப்பில் இருக்கும் அனைத்துப் பாடசாலைகளிலும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு காலை ஒன்றுகூடலின் போது மௌன அஞ்சலியும் செலுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை அனைத்துப் பாடசாலை அதிபர் ஆசிரியர்களிடம் விடுக்கின்றோம் என்று தெரிவித்தனர்.

மேலும் ஊடக சந்திப்பிற்கு முன்னர் கடந்த 09ம் திகதி இடம்பெற்ற போராட்டத்தில் உயிர்நீத்த ஆசிரியை ஏ.டி வருணி அவர்களுக்கு மெழுகுவாத்தி ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யஸ்மின் சூக்காவுக்கு கொழும்பு மாவட்ட

ஏற்கனவே அனுப்பப்பட்ட அறிவித்தலின் படி, பிரதிவாதிகள் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என நீதிவான்ஏ.டி.சத்துரிக்கா டி சில்வாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போதே மீண்டும் அறிவித்தல் அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமக்கு தீங்கிழைக்கும் வகையில், சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டப் (ITJP) பணிப்பாளா் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணியும் ஆர்வலருமான யஸ்மின் சூகாவின் இணையதளத்தில் வெளியான அறிக்கைகளுக்காக தமக்கு 1 பில்லியன் ரூபா நட்டஈடு தரப்படவேண்டும் என்று மனுதாரரான சாலி கோரியிருந்தார்.

அரச மருத்துவர் ஒருவரை காவலில் வைக்கவற்புறுத்தியதாகவும், அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து தவறான சாட்சியம் அளிக்க மிரட்டியதாகவும், சூக்காவின் இணையத்தள அறிக்கைகளில் சுரேஸ் சாலியின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் 2020, ஜூன் முதலாம் திகதியன்று முதலாம் பிரதிவாதியான சூகா, தன்னைக் குறிப்பிட்டு, வெளியிட்ட அறிக்கைகளை 2வது பிரதிவாதி, சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இணையத்தில் பிரசுரித்ததாக மனுதாரா் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்படி, 2வது மற்றும் 3வது பிரதிவாதிகள் இணையத்தளத்தில் பொய்யான, தீங்கிழைக்கும் மற்றும் அவதூறான அறிக்கைகளை வெளியிடுவதற்கு காரணமாக இருந்ததாக மனுதாரா் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

## சீனா, இந்தியா, அமெரிக்காவின் பலத்தை

முகம், கொழும்பு துறைமுகத்தின் தெற்கு தளம், 13 ஏக்கர்களை கொண்ட சேவைகள் நிலையம் மற்றும் போர்ட் சிட்டி ஆகிய அதி முக்கிய இடங்கள் சீனாவின் பிடிக்குள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் 32ஆவது கார்த்திகை வீரா்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்

இன்று வீசா இல்லாத பயணியைப் போன்ற சீனக் கப்பல், இலங்கையில் இருந்து செல்லாமல், இலங்கையின் கடற்பகுதியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கத்தின் அமைச்சரவை, அமைச்சா்கள் வெளியில் வந்து அரசாங்கத்தை நேரடியாக குற்றம் சுமத்துகின்றனர். இந்த நாடு அபிவிருத்தியை முன்கொண்டு செல்ல வேண்டிய நாடு என்ற வகையில், பொதுமக்கள் இயக்கத்தை அமைக்க வேண்டியுள்ளது. இந்த புதிய இயக்கத்தை அமைப்பதற்காக அனைவரும் அழைப்பு விடுக்கின்றேன்.

அதுவே இன்று நாட்டை மீட்கும் ஒரே மார்க்கமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் பேசும் கட்சிகளை ஒரு தளத்தில் அணி

மேலும் இந்தக் கலந்துரையாடலை சுமந்திரன் அமெரிக்காவிலிருந்து மீண்டும் நாடு திரும்பியதும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் இரா.சம்பந்தன் பங்காளிக்கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தீர்மானித்திருந்தன.

இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்றபோதும் தமிழ்த் தேசியப் பரப்பில் முக்கிய கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பங்கேற்றிருக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் கொள்கை அளவில் ஒற்றையாட்சி அரசியலமைப்பில் காணப்படும் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு தாம் தயாராக இல்லை என்று பகிரங்கமாக கூறியுள்ளது.

இந்நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை அமுலாக்கக் கோரும் செயற்பாட்டில் தாங்கள் பங்கேற்க முடியாது என்பதையும் அக்கட்சி தர்க்க ரீதியாக நியாயப்படுத்தியுள்ளது.

இதேவேளை சம்பந்தன் இக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான ஏது நிலைமைகள் இன்மையால் கூட்டத்தினை பிற்போடுமாறு இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்ட போதும் அது நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் பேசும் கட்சிகளை சந்திக்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.



# மாநகர சுத்திகரிப்புகடமைக்கு இடையூறு விளைவித்த போலிசாரை தட்டிக்கேட்ட உறுப்பினர்!

## பதிலுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாக போலிசில் மாநகரசபை உறுப்பினர் ராஜன் முறைப்பாடு

**(காரைதீவு நிருபர் சகா)**

கல்முனை மாநகர சுத்திகரிப்புகடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு இடையூறு விளைவித்த பொலிசாரை தட்டிக்கேட்ட உறுப்பினருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அதே உறுப்பினர் அதே கல்முனைப் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினரான சந்திரசேகரம் ராஜன் என்பவரே இவ்விதம் தன்னை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மதுபோதையில் தகாதவார்த்தைகளால் பேசி உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாக கல்முனைப் பொலிசில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் வெள்ளியன்று இரவு இடம் பெற்றது.

சம்பவம் பற்றி உறுப்பினர் ராஜன் தெரிவித்தாவது:

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவின் கீழ் இருக்கின்ற பாண்டிருப்பு பிரதேசத்தில் எமது மாநகரசபை ஊழியர்கள் வீதிவடிகான் சுத்திகரிப்பு பணியில் ஒரு ஜேசிபி கனரக இயந்திரம் பெரிய லாறி சகிதம் இருபக்கமும் வீதி மறிப்பு சமிக்ஞை பிளாஸ்ரிக் கூம்புகளைவைத்து ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அச்சமயம் கல்முனை பொலிஸ் உத்தியோகத்தரான அருணனும் அவரோடு வந்த மதுபோதையில் வந்த குழுவினர் கல்முனை மாநகர சபை சுகாதார ஊழியர்களை வீதி வடிகானை துப்பரவு செய்ய விடாமல் பிளாஸ்ரிக் கூம்புகளை அகற்றி அவர்களுக்கு அடித்து துரத்துவதற்கு எத்தனித்தார். எனக்கு தகவல் கிடைக்கவே நான் அங்கு சென்று சமாதானம் செய்தேன்.



ஆனால் அவர்கள் மதுபோதையில் இருந்ததால் எந்தக்கதையையும் கேட்கவில்லை. மாறாக நினைத்தால் கஞ்சாவை வைத்து உன்னைக்கைதுசெய்த கூட்டில் அடைப்பேன் என்று என்னையும் தாறுமாறாக தகாதவார்த்தைகளால் பேசி அச்சுறுத்தினார். இதற்கான வீடியோ ஆதாரமும் உள்ளது.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே மறுகணம் நான் கல்முனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் அம்பாறைப்பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்கருக்கும் அறிவித்தேன். அவர் உடனே உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை பணித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

அதற்கமைய அனைவரும் நள்ளிரவு 12மணியளிவில் கல்முனைப்பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப் பட்டு உதவிப்பொலிஸ் அத்தியட்சகரால் விசாரிக்கப்பட்டனர். நானும் முறைப்டுதெரிவித்தேன்.

குறித்த பொலிசார் மதுபோதையில் இருந்தார்களா என்பதை ஊர்ஜிதம் செய்ய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதனிடையே தங்களை மாநகரபணியை புரியவிடாமல் தடுத்த பொலிசாருக்கு எதிராக மறுநாள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ஊழியர்கள் அறிவித்தல்கொடுத்தனர். எனினும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் நடவடிக்கையை அடுத்து அது விலக்கிக்கொள்ளப்பட்டது.

எது எப்படியிருப்பினும் இது தொடர்பாக நான் பொலிஸ் மாஅதிபர் பாதுகாப்புத்துறை செயலாளர் அமைச்சர் சரத்வீரசேகர ஆகியோருக்கு அறிவித்துள்ளேன்.

## நீக்கப்பட்ட மன்னார் பிரதேச சபை தவிசாளர் முகம்மது முஜாஹிர் மீண்டும் தனது பொறுப்புக்களை ஏற்கின்றார்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு உறுப்பினராகவும் சபையின் தவிசாளராகவும் இருந்து நீக்கப்பட்ட சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் மீண்டும் தனது பொறுப்புக்களை ஏற்க இருக்கின்றார்.



முன்னாள் வட மாகாண ஆளுநர் திருமதி பி.ச.ம.சார்ள்ஸ் 2021.09.13 ந் திகதி வர்த்தமானி மூலம் அறிவித்தலுக்கு அமைவாக மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் அப்பதவியில் பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது குற்றங்களை புரிந்துள்ளார் என்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இருப்பதாக என தெரிவித்து தவிசாளர் மற்றும் சபை அங்கத்துவர் பதவிகளிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதாக வெளியிடப்பட்ட வர்த்தமான அறிவித்தல் இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் முஜாஹிர் தனது பதவிகளை ஏற்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது கடந்த 09.03.2018 அன்று இடம்பெற்றது. இவ் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியானது இவ் பிரதேசசபைக்கான ஆட்சியை தன்வசம் கைப்பற்றியிருந்தது.

இதற்கமைய இவ் பிரதேச சபைக்கான தவிசாளராக இவ் கட்சியைச் சார்ந்த சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் புதுக்குடியிருப்பு வட்டாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் இவர் மன்னார் பிரதேசசபையின் தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் மன்னார் பிரதேசசபையின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 185 (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய எவையேனும் தகுதியின்மைகள் உள்ளனவா என்பது பற்றி விசாரனை செய்து அறிக்கை சமர்ப்பிப்தற்காக 198% ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 185 (2) ஆம் உப பிரிவுகளுக்கமைய நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதி அலுவலர் கந்தையா அரியநாயகம் அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரனை குழுவினால் விசாரனை செய்யப்பட்டு வாதித்தரப்பின் சாட்சியங்களைக் கவனத்திற் கொண்டதன் பின்பே இவர் தனது மன்னார் தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று முன்னாள் வட மாகாண ஆளுநர் திருமதி பி.ச.ம.சார்ள்ஸ் 2021.09.13 ந் திகதி வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் வட மாகாண ஆளுநரால் மன்னார் பிரதேச சபை தவிசாளர் நீக்கப்பட்டமையை ஆட்சேபித்து எஸ்.எச்.எம்.முஜாஹினால் கொழும்பு மேல் நீதிமன்றில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு புதன்கிழமை 29.09.2021 நடைபெற்றது

அப்பொழுது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வசம் இருந்த மன்னார் பிரதேச சபை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி வசம் திரும்பியிருந்தது. ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியை சார்ந்த எருக்கலம்பிட்டி உறுப்பினர் எம்.ஐ.எம். இஸதீன் ஒரு வாக்கு வித்தியாசத்தால் மன்னார் பிரதேச சபை தவிசாளராக அப்பொழுது தெரிவு செய்யப்பட்டு இருந்தார்.

இந்த நிலையில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 185 (3) (ஆ) ஆம் பிரிவின்படி விடயப் பொறுப்பு அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டு 2018.10.24 ஆம் திகதி முதலாவது வட மாகாண சபை காலாவதியானதன் பேரில் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 2 ஆம் பிரிவினூடாக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் வட மாகாண ஆளுநராகிய ஜீவன் தியாகராஜட ஆகிய நான் ஒய்வுபெற்ற நீதி அலுவலர் திரு கந்தையா அரியநாயகம் அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரனைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் அவர்களை மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர் பதிவியிலிருந்து தீர்மானித்து வெளியிடப்பட்ட 2021.09.13 ஆந் திகதிய வர்த்தமான அறிவித்தலை இரத்து செய்கின்றேன் என வட மாகாணம் ஆளுநர் ஜீவன் தியாகராஜட 2021.11.10 ந் திகதி புதன்கிழமை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் தனது பதவியை மீண்டும் திங்கள்கிழமை (15.11.2021) பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மூதூர் கடலரிப்பால் மறையும் நிலங்கள்,தவிக்கும் கடலோர மக்கள்





**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கடற் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பாரிய இடர்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துன் கருவாட்டு வாடி உற்பத்தியாளர்களின் பெருமதியான தொழில் தளங்கள் கடலுக்கு இரையாவதோடு மற்றும் பெருமதியான அரச பொதுக்கட்டிடங்களும் நாளாந்தம் சேதமாக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மூதூர் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக, சுமார் இது வரைக்கும் 400 மீட்டர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் உட் புகுந்துள்ளதாக அப்பிரதேசங்களை சேர்ந்த மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக மூதூர் பிரதேசத்தில் கடலரிப்பு மிகவும் தீவிரமடைந்துள்ளதால் அதனைத் தடுக்கும் ஆரம்ப தற்காலிக நடவடிக்கையாக முதன் முதலாக கடந்த 2003 காலப்பகுதியில் கரையோரைப் பகுதிகளில் கற்கள் நிரப்பப்பட்ட கம்பியினாலான கூடுகளில் கற்கள் இடப்பட்டு கடல் கரையிலிருந்து கரையினை நோக்கி %0 மீற்றர் வரையான பகுதிகளில் நிலத்தினை தோண்டி கற்கூடுகள் நிலத்தில் உள்ளீர்கப்பட்டன ஆனால் அது வெற்றியளிக்க வில்லை அது கடந்த சுனாமி அலைத் தாக்கத்தின் காரணமாக கற்கூடுகள் சேதமாக்கப்பட்டதோடு கடற்கரையின் வண்மையான தட்டுக்களும் அரிக்கப்பட்டதனாலும் ஒரே அடியாக கடற்கரையின் சுமார் 75 மீற்றர் தூரம் கடலுக்குல் உள்ளீர்கப்பட்டது.

இது இவ்வாறு தொடருமானால் மூதூர் கடற்கரையோரப் பிரதேசங்கள் பெரிதும் பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள் வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அரசாங்கத்திற்கு எதிராக புஸ்ஸலாவ நயப்பன தோட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்





**(க.கிஷாந்தன்)**

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை எனவும், உரப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி புஸ்ஸலாவ நயப்பன தோட்ட தொழிலாளர்களும், பிரதேச சபை உறுப்பினர்களும் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புஸ்ஸலாவ நயப்பன தோட்டத்தில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இப்போராட்டத்தில் தோட்ட தொழிலாளர்கள், தமிழ் முற்போக்கு கூட்டணியின் உடபளாத பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அத்துடன், தோட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் பங்கேற்று, விலையேற்றத்தைக்கண்டித்து பேரணியாக நயப்பன அம்மன் ஆலய சந்தி முன்பாக ஆரம்பமாகி நயப்பன பஸ் தரிப்பிடம் வரை சென்று, அங்கு பதாதைகளை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடனடியாக குறைக்கவும். வரவு செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்கு எதுவும் இல்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும். அதற்கான விசேட பொறிமுறை அவசியம்.' எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

## மன்னாரில் திருவள்ளுவர் விழாவுக்கான ஏற்பாடுகள் முன்னெடுப்பு

**( வாஸ் கூஞ்ஞ)**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து மன்னாரில் திருவள்ளுவர் விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக பிராத்தனை மண்டபத்தில் 16.11.2021 அன்று செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருக்கின்றது.

இவ் நிகழ்வில் கௌரவ அதிதியாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சுஜிவா சிவதாஸ் கலந்துகொள்ள இருக்கின்றார்.

இவ் நிகழ்வின்போது மன்னார் மாவட்டத்துக்கான மாவட்ட கீதம் வெளியீடு மற்றும் சிறப்புரை, பட்டிமன்றம், கவியரங்கம், குறல் நடனம், குறல் தரும் சிந்தனை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

அத்துடன் திருக்குறல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

# மக்கள் விடுதலை முன்னணியினரால் 32 ஆவது தேசிய வீரர்கள் தினம் அனுஷ்டிப்பு




(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ், கதிரவன்)

மக்கள் விடுதலை முன்னணியினரால் 32-வது தேசிய வீரர்கள் தினம் மலரஞ்சலி செலுத்தி தீபசுடரேற்றி திருகோணமலையில் அனுஸ்டிக்கப்பட்ட்டது

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் திருகோணமலை பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர அவர்களின் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மக்கள் விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர இவ்வாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்

நவம்பர் 13ஆம் திகதி என்று சொல்வது எமது கட்சியின் வரலாற்றில் ஒரு மிகவும் முக்கியமான தினமாகும் காரணம் எமது கட்சியின் தலைவர் இந்த கட்சியை ஆரம்பித்த தோழர் ரோகன விஜேவீர உட்பட பலர் படுகொலை செய்யப்பட்ட அந்த நிகழ்வின் ஒரு நினைவு தினமாகவே இந்த நவம்பர் 13ம் திகதியினை நாங்கள் அனுஷ்டித்து வருகின்றோம்.

ஆகவே இவ்வாறான நிலையிலேயே இந்த நாட்டில் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகள் அக்காலப்பகுதியில் இருந்தது அதனை சற்று எடுத்து பார்ப்போம் என்று சொன்னான் மிகவும் மோசமான ஜனநாயக படுகொலைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலம், அதே போல் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலம், ஏகாதிபத்தியத்திற்கு முகம் கொடுத்துக்கொண்டிருந்த காலம் அந்த காலப் பகுதியிலேயே இந்த தோழர்கள் எந்த வித நிபந்தனையும் இல்லாமல் தமது உயிரைப் பணயம் வைத்து இந்த போராட்டங்களில் ஈடுபட்டார்கள் அதற்கு அவர்களது உயிர் கூட இரையானது என்றுதான் கூற வேண்டும்.

அனாலும் மிகவும் துக்ககர விடயமாக நாங்கள் கருதுவது இந்த சம்பவம் இடம்பெற்றது 32 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்த நாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எந்தவிதமான தீர்வுகளையும் இந்த அரசியல் தலைமைகளால் வழங்க முடியாமல் போயிருக்கிறது என்பதை கூடவேண்டும்

ஒரு பக்கம் பார்த்தோம் என்று சொன்னால் இந்த ஊழல் மோசடி நிரம்பிய இந்த ஆட்சியாளர்கள், ஒரு புறத்தில் இந்த ஆட்சியை மேற்கொண்டு வரும் வேளையில், இன்னொரு புறத்தில் இந்த நாட்டை துண்டாட இந்த நாட்டை கூறு போட்டு விற்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள், இன்னொரு புறத்தில் நாங்கள் பார்த்தோம் என்று சொன்னார்கள் இளைஞ்ஞர்கள் வேலை இல்லாமல் இன்று வீதிக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள், இன்னும் சொல்ல போனால் இந்த நாட்டில் விவசாயிகள் மீனவர்கள் பாரிய சிக்கல்களுக்கு துன்பங்களுக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே இவ்வாறான இந்த வேளையிலே இளைஞர்களாகிய நாம், இந்த நாட்டின் குடிமக்களாகிய நாம் அனைவரும் ஒரு தெளிவுடன் பயணிக்க வேண்டிய தேவையில் நாங்கள் இருக்கின்றோம் நாட்டு மக்களும் ஒரு மாற்று அரசியலை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள்.ஆகவே அவ்வாறான வேளையிலே நாங்கள் உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் இந்த தோழர்கள் எண்ணியதை நாங்கள் நிறைவேற்றுவதற்கு நாங்கள் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் எந்தப் பாகுபாடும் இல்லாமல் அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற கோரிக்கையினை முன்வைப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இவ் 32-வது நினைவேந்தலில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கடந்த இரு தினங்களில் 50 கோவிட் தோற்றாளர்கள்

(வாஸ் கூஞ்ஞ)

கடந்த இரு தினங்கள் அதாவது 12.11.2021, 13.11.2021 ஆகிய இரு தினங்கள் மன்னார் மாவட்டத்தில் 50 கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

12.11.2021 அன்று 41 கொவிற் தொற்றாளர்களும், 13.11.2021 அன்று 09 கொவிற் தொற்றாளர்களும் இனம் காணப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தனது நாளாந்த கொவிற் தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 12 ந் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆன்டிஜென் பரிசோதனையில் 41 கொவிற் தொற்றாளர்கள் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேரும், நானாட்டானில் 0% நபர்களும், மன்னார் பொது வைத்தியசாலை. ஆடம்பன் வைத்தியசாலை ஆகியவற்றில் தலா 06 நபர்களும். வங்காலை வைத்தியசாலையில் 03 பேரும், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பேசாலை வைத்தியசாலை ஆகியவற்றில் தலா 02 நபர்களும் முருங்கன், நானாட்டான் மற்றும் எருக்கலம்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் தலா ஒருவரும்.

13.11.2021 அன்று மேற்கொள்ளப்பட்ட ஆன்டிஜென் பரிசோதனையில் 09 பேர் கொவிட் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முருங்கன் வைத்தியசாலையில் 03 பேரும், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேரும், மன்னார், நானாட்டான், எருக்கலம்பிட்டி மற்றும் சிலாவத்துறை வைத்தியசாலைகளில் தலா ஒருவரும் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் (நவம்பர்) மேற்கொள்ளப்பட்ட 1768 ஆன்டிஜென் பரிசோதனையிலும், 238 பி.சீ.ஆர். பரிசோதனையிலும் இது வரைக்கும் இந்த மாதம் (நவம்பர்) 292 கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நாளாந்த அறிக்கையில் தொவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் முதன்முதலில் கடற்கரை கூடைப்பந்து விளையாட்டு (KORFBALL) திருகோணமலையில் அறிமுகம்





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ் ,கதிரவன் . அ . அச்சுதன்)

120 வருடங்களுக்கும் பழமையான நெதர்லாந்து நாட்டு கூடைப்பந்து (KORFBALL) கடற் கரை விளையாட்டு (KORFBALL) இலங்கையில் முதன்முறையாக திருகோணமலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது

நேற்று முன்தினம் (13) பிற்பகல் திருகோணமலை பிரதான கடற்கரையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது

இவ் கூடைப்பந்து (KORFBALL) போட்டி உலக நாடுகள் உட்பட இலங்கையில் உள்ளக அரங்கு மற்றும் வெளி மைதானங்களில் மாத்திரமே விளையாடப்பட்டு வந்தது உலகின் 68வது நாடாக 2015ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது இவ் (KORFBALL) கூடைப்பந்து விளையாட்டு

கூடைப்பந்து (KORFBALL) விளையாட்டு இலங்கையில் முதல் தடவையாக கடற்கரையில் விளையாடுவதற்கு 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி கூடைப்பந்து (KORFBALL) இலங்கைக்கான அமைப்பாளர் ஜோகஸ் வேன் நுன்ஸ்பீட் (JOSE VAN NUNSPEET) அவர்களினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது

இப்போட்டியின் முக்கிய அம்சமாக உள்ளக அரங்கு உட்பட வெளியக மைதானங்களில் அணிக்கு 8 போட்டியாளர்கள் அடங்குவர் அவர்களில் கட்டாயமாக நான்கு பெண்களும் நான்கு ஆண்களும் ஆக அணி அமைவது இப்போட்டியில் முக்கிய அம்சமாகும் அதனடிப்படையில் கடற்கரையில் விளையாடப்படும் கூடைப்பந்து (KORFBALL) கூடைப்பந்து போட்டியில் அணிக்கு நான்கு பேர் மாத்திரமே விளையாட முடியும் அவர்களில் இரு ஆண்களும் இரு பெண்களும் என விளையாடுவது கட்டாயம் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் உலக நாடுகளில் 70க்கும் மேற்பட்ட நாடுகளில் இவ் விளையாட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது 1993 ஆம் ஆண்டு சர்வதேச போட்டியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் 68வது நாடாக இலங்கையிலும் இப்போட்டி அறிமுகம் செய்யப்பட்டு இன்றைய தினம் இலங்கையில் முதல் முறையாக கடற்கரையில் விளையாடுவதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இப்போட்டி அறிமுக விழாவில் இலங்கை கடற்படையின் கிழக்குமாகாண தளபதி ரியர் அட்மிரல் சஞ்சீவ டயஸ்,கிழக்குமாகாண பல்கலைக்கழக திருகோணமலை வளாக பேராசிரியர் கனகசிங்கம், திருகோணமலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன, இலங்கை ராணுவத்தின் திருகோணமலை தலைமையகம் இரண்டாவது கட்டளை தளபதி மேஜர் எம்.என்.கே.குமார,நெஸ்லே லங்கா தனியார் நிறுவனத்தின் தேசிய விற்பனை நிர்வாக அதிகாரி மஞ்சுள நரங்கோட,(KORFBALL) ஸ்ரீலங்கா அமைப்பின் பொதுச் செயலாளர் புஷ்பகுமார மதுரப்பெருமா மற்றும் நடுவர்கள் பிரதேச விளையாட்டு பயிற்றுவிப்பாளர் விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த போலிஸ் அதிகாரியை மன்னார் மாவட்டம் இழந்து நிற்கின்றது

( வாஸ் கூஞ்ஞ)



கடந்த இரண்டரை வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த பண்டுல்ல வீரசிங்க அவர்கள் உயர் பதவி பெற்று கொழும்பு திட்டமிடல் பொலிஸ் பிரிவிற்கு இடமாற்றம் பெற்று செல்கின்றார்.

இவர் மன்னார் மாவட்டத்தில் கடமைபுரிந்த காலத்தில் சகல பொது மக்களுடனும் நல்ல உறவுகளை பேணி பாதுகாத்து வந்ததுடன் கல்வியில் மற்றும் வறுமை கோட்டுக்குள் வாழ்ந்த மாணவர்கள். மற்றும் மக்களுக்கு உதவிகள் பல புரிந்து நல்லதொரு இடத்தை மன்னார் மாவட்டத்தில் பெற்றிருந்தார்.

இவருடைய காலத்தில் மன்னார் மாவட்டத்தில் பெருந்தொகையான போதைப் பொருட்கள் மற்றும் கடத்தல் காரர்களையும் கைது செய்வதில் பொலிசாருக்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தவர்.

இவரிடம் எவரும் எந்த முறைப்பாடு செய்தாலும் அவற்றுக்கெல்லாம் தீர்வை பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தி வந்ததுடன் சிவில் மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து நல்ல திட்டங்களை முன்னெடுத்து வந்தவர் என பலரும் புகழாரம் சூட்டுவதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஞாயிற்றுக் கிழமை (14.11.2021) மன்னாரிலிருந்து புதிய பொறுப்பை ஏற்கச் செல்லும் இவ்வாறான ஒருவர் மன்னார் மாவட்த்திலிருந்து திடீரென இடம்மாற்றம் பெற்று செல்வது பலருக்கும் கவலையை உண்டு பண்ணியுள்ளதாக பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

# கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நடமாடும் சிகிச்சை பிரிவு கல்முனைக்குடி நகர மண்டப வீதியில் திறந்து வைப்பு!



(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ், றாஸிக் நபாயிஸ் )

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நடமாடும் சிகிச்சை பிரிவு கல்முனைக்குடி நகர மண்டப வீதியில் நேற்றுமுன்தினம்வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை தவிசாளர் டாக்டர் எம் ரிசான் ஜெமீலின் ஆலோசனைக்கு அமைவாக மக்களின் காலடிக்கு மருத்துவ சேவையை கொண்டு செல்லும் எண்ணக்கருவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சுகாதார நல நடமாடும் சேவை பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

ஹோமியோபதி நிபுணர் டாக்டர் எம் ஐ எம். முனீர் தலைமையில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபவ ரீதியாக சுகாதார நல நடமாடும் சிகிச்சை பிரிவை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் புவனேந்திரன், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம் எச் கே சனூஸ், கல்முனை சாஹிரா கல்லூரி தேசிய பாடசாலையின் அதிபர் எம் ஐ ஜாபிர் உட்பட பெருந்தொகையான பொதுமக்களும் கலந்து கொண்டனர்

இதன் போது கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அனுசரணையுடன், நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்

இந்த நிகழ்வுகளில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஐ எம் நிஸ்மி, செயலாளர் ஏ புஹாது, பொருளாளர் எஸ் ஏ பாஸித் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்

இதன் போது மர்ஹூம் டாக்டர் ஜெமீல் அவர்களின் ஞாபகார்த்தமாக தேவையுடைய வசதி குறைந்த 100 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்புக்கான நிதி உதவிகள் கையளிக்கப்பட்டதோடு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது

மேலும் கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை அதன் ஸ்தாபகர் மர்ஹூம் டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்தமாக முன்னெடுத்து வரும் பல்வேறு சமூக நலத் திட்டத்தின் ஓர் அங்கமாக இதன் போது இலவச கண் சிகிச்சை முகாம், உடற் பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனை ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது



# தமிழ், சிங்கள சித்திரை புத்தாண்டு தினத்தில் பாற்சோறு உட்கோள்வதற்கு முடியாத ஒரு வருட பிறப்பாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது

## பாட்டலி சம்பிக்க ரணவக்க பா.உ

(க.கிஷாந்தன்)

2005ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அதிக வட்டிக்கு கடனை பெற்று, அதனை எந்தவித வருமானமும் கிடைக்காத இடங்களில் அபிவிருத்தி பணிக்காக ஈடுபடுத்தப்பட்டமையே, இன்றைய டொலர் பிரச்சினைக்கான காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிக்கின்றார்.

நுவரெலியாவில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்வாறு ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினைக்கு, 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் எந்தவித தீர்வும் முன்வைக்கப்படவில்லை என அவர் கூறுகின்றார்.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கூட முடியாத அளவிற்கு டொலர் பிரச்சினை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

உரம், கிருமி நாசி ஆகியவற்றுக்கான இறக்குமதி தடை மற்றும் மழையுடனான சீரற்ற வானிலை காரணமாக இன்று மரக்கறி விலைகள் வானம் அளவிற்கு உயர்வடைந்துள்ளதாக அவர் கூறுகின்றார்.



இவ்வாறு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை பொதுமக்களினால் பொருத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதனால், மக்களின் வர்த்தக நடவடிக்கைகள் வீழ்ச்சி அடைந்துள்ள பின்னணியில், அவர்கள் கொள்ளையடிக்கும் நிலைக்கும், தற்கொலை செய்துக்கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கின்றார்.

எதிர்வரும் தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு தினத்தில் பாற்சோறு உட்கொள்வதற்கு முடியாத ஒரு வருட பிறப்பாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

இனிவரும் காலங்களில் பழைய தலைவர்களுக்கு இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்பதனை ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறிய அவர், நாட்டை புதிய தலைமுறைக்கு கையளிக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலுள்ள அங்கத்துவ கட்சிகளுக்கு மாத்திரமன்றி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்கு கூட இன்று தமது பிரதேசத்திற்கு செல்ல முடியாத நிலைமை எழுந்துள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள பிரச்சினையை அனைத்து மக்களும் எதிர்நோக்கியுள்ளமை மற்றும் விவசாயிகளுக்கு உரம் கிடைக்காத பிரச்சினை ஆகியவற்றினாலேயே இவர்களுக்கு தமது பிரதேசத்திற்கு கூட செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளை மறைப்பதற்காக தனிமைப்படுத்தல் சட்டம், இரகசிய பொலிஸாரை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை தவறாக கையாளுதல் போன்ற செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றஞ்சுமத்துகின்றார்.

இவ்வாறான விடயங்களினால், இந்த பிரச்சினைகள் வலுப் பெறும் எனவும், மக்களை இனிவரும் காலங்களில் தடுத்து நிறுத்த முடியாது எனவும் அவர் கூறுகின்றார்.

# டெங்கு விசேட ஒழிப்பு 3 நாள் வேலைத்திட்டம் காரைதீவில் வெற்றி!





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மழை காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில் தற்போது விசேட நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 3நாட்களில் தொடர்ச்சியாக இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது என காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார். இதற்கமைய இப் பிரதேசத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நுளம்புகள் ஆய்வின் போது நுளம்புகளின் செறிவு அதிகமாக காணப்படுவதால் தங்களது வீட்டை சுற்றிலும் அதனை சூழவுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு பொதுமக்களை ஏலவே காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டிருந்ததற்கமைவாக மக்கள் தயாராகவிருந்தனர்.

குறித்த விசேட நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டமானது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீரின் தலைமையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# சமூக ஊடகங்கள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி பட்டறை







(செல்வி வினாயகமூர்த்தி)

இலங்கையில் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் பொய்யான செய்திகள் மற்றும் வெறுக்கதக்க பேச்சுக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சி பட்டறை (13) சனிக்கிழமை அக்கரைப்பற்றில் இடம் பெற்றது.

ஜெர்மன் நாட்டு வெளிவிவகார அமைச்சின் செயல்திட்டத்தின் கீழ் டெமோகரசி ரிப்போட்டின் இன்ரநெஸ்னல் ஸ்ரீலங்கா(Democracy Reporting International srilanka) அமைப்பின் அனுசரனையில் இப்பயிற்சி பட்டறை இடம்பெற்றிருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் சமூகமட்டத்தில் பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பாடல்களை கொண்டுள்ள அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், இளையோர் அணிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல்வேறுபட்ட தரப்பிலிருந்தும் இப் பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகவலைத்தளங்களில் பொறுப்பற்ற முறையில் பதிவிடப்படும் போலிச்செய்திகள் மற்றும் வெறுப்பு பேச்சுக்கள் தொடர்பில் எவ்வாறு இனங்காண்பது? அவற்றை எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பிலும் வளவாளரால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான செய்திகளை பரப்புவதில் ஈடுபடுபவர்களை தண்டிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளது? என்பது தொடர்பிலும் கலந்து கொண்டோரின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டது.

சமூக ஊடகங்கள் குறித்தான பயிற்சி பட்டறையானது அக்கரைப்பற்று மெங்கோ காடன்(mango Garden) ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. சட்டத்தரணி ஏ. ஐங்கரன் வளவாளராக கலந்து கொண்டதுடன் சமூக ஊடகங்கள் குறித்தான சந்தேகங்ககளை தெளிவுபடுத்தியிருந்தார். டெமோகரசி ரிப்போட்டின் இன்ரநெஸ்னல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் நிதிப்பொறுப்பாளர் ஏ.ரெபேக்கா மற்றும் இணைப்பாளர் ஷிபானி மொஹமட் ஆகியோரும் இவ் செயலமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழையும் வரலாற்றையும் ஏந்தி அரசியலில் வேற்றி பேற்றவர் மூதூர் மஜீதுசு

## எழுத்தாளர் கனகசபை தேவகாட்சம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

மறைந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத் அவர்களின் 34 ஆவது ஆண்டு நினைவு தினம் மூதூரில் உள்ள அத்பால் சிறுவர் இல்லத்தில் நேற்று முன்தினம்இடம் பெற்றது.

இதன் போது சிறுவர்களுக்கான மதிய போசனமும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் போது உரையாற்றிய எழுத்தாளர் கனகசபை தேவகாட்சம் அழகு தமிழை அடுக்கு மொழியிலும் கம்பீரமான உச்சரிப்பையும் ஒவ்வொரு அரசியல் மேடையிலும் பேசுவதோடு தமிழ் மக்களின் புரான வரலாற்றை திருகோணமலை வாழ் மக்கள் மத்தியிலும் தெளிவாக உரையாற்றி அரசியலில் இன்று வரை நினைக்கப்படும் அளவிற்கு வரலாறு படைத்த ஆசான் அப்துல் மஜீது என்று கூறுவது வெறும் புகழ்ச்சி வார்த்தைகளல்ல . 19%0 களில் இருந்த அரசில் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து பேரினவாத அரசியலுக்கு அடிபணியாது தமிழையும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் துணிவோடு செயற்படுத்தியவர் அவரின் வெற்றிடம் இந்த மண்ணில் இன்னும் நிரப்பப்படவில்லை என்பது நிதர்சனம் என்றார்.

# கோரோனா தோற்றிலிருந்து மாணவர்களை பாதுகாக்க பேற்றோர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வு

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு, மாணவர்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் முறைகள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வொன்று சனிக்கிழமை (13) இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எம்.எம். மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற





இந்நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர் மற்றும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஏ.எம்.ஜாபீர் கரீம் ஆகியோர் கலந்து கொண்டு பெற்றோர்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்வினை வழங்கினார்கள். இதில், பெற்றோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT




# எம்.ஐ.எம். முஹியத்தீன் மறைந்தும் பேசப்படும் ஆளுமையாக மக்கள் மனதில் வாழ்வார்!



(மாளிகைக்காடு நிருபர்)

சுனாமி இழப்புகள் தொடர்பாக தகவல்கள் திரட்டி, ஆய்வு செய்து அதைப் பதிவு செய்தவர் எனும் பெருமைக்குரியவாராக மாத்திரமின்றி யுத்தகால இழப்புகளை ஆவணப்படுத்தியதுடன் நிலத்தொடர்பற்ற முஸ்லிம் மாகாணக் கோரிக்கையின் பிதாமகனாக திகழ்ந்த ஆராய்ச்சியாளர், பன்னூலாசிரியர், புள்ளி விபரவியலாளர், ஆவணக் காப்பாளர் என்ற பன்முக அடையாளங்களோடு சோர்வின்றி இயங்கி வந்த எம்.ஐ.எம். முஹியத்தீன் காலமானார் எனும் செய்தி இலங்கை வரலாற்றினதும், ஆராய்ச்சிகளினதும் தொய்வை ஆரம்பித்துள்ளதாக நோக்குகிறோம் என அல்- மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா விடுத்துள்ள அனுதாப செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த அனுதாப செய்தியில் மேலும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி எனும் அரசியல் கட்சியை நிறுவி, அதன் செயலாளர் நாயகமாக இருந்து சளைக்காமல் செயற்பட்டார். கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணியின் ஸ்தாபகர். முஸ்லிம் செய்தி பத்திரிகையின் ஆசிரியர். என்ற பல்வேறு தளங்களில் இயங்கிய அவர் தொடரான சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவர். தன் சொந்த நிதியைச் செலவிட்டு பல பெறுமதியான நூல்களையும் ஆவணங்களையும் அச்சிட்டு இலக்கிய உலகுக்கு தந்தவராக உள்ளார். முன்னாள் அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் தலைமையில், தமிழீழ விடுதலை புலிகளோடு சென்னையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர் என்பதெல்லாம் அவரின் ஆளுமையின் வெளிப்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

தென்கிழக்கின் அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தன் வீட்டையே ஒரு ஆவணக்காப்பகமாக ஒழுங்கமைத்திருந்தார். என்பதையெல்லாம் அறிகின்ற போது இந்த சமூகத்தின் மீதும் இலங்கை தேசத்தின் மீதும் அவருக்கிருந்த பற்றையும் எழுத்துக்களின் மீது அவருக்கிருந்த காதலையும் அறிய முடிகிறது. ஆராய்ச்சியாளர், பன்னூலாசிரியர், புள்ளிவிபரவியலாளர், ஆவணக் காப்பாளர் என்ற பன்முக அடையாளங்களோடு வாழ்ந்து மறைந்த அவர் மறைந்தும் பேசப்படும் சிலரில் முக்கிய இடத்தை பெறுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தோல்பொருட்களை தம்வசம் வைத்திருந்த இளைஞன் கைது

(பாறுக் ஷிஹான்)



பண்டையகால தொல்பொருட்கள் என சந்தேகிக்கப்படும் பொருட்களை தம்வசம் வைத்திருந்த இளைஞனை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேசிய புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய வெள்ளிக்கிழமை (12) மாலை அக்கரைப்பற்று போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.பகீரதன் தலைமையில் சென்ற பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தாண்டியடிப் பகுதியை சேர்ந்தவர் எனவும் 19 வயது மதிக்கத்தக்க இச் சந்தேக நபரிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ஆபரணங்கள் அடங்கிய பொருட்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு முறையியல் தொடர்பான விரிவுரைகள் ஆரம்பம்



(எம்.ஏ.றமீஸ்)

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பட்டப் பின் கற்கைக்கான ஆய்வு முறையியல் சம்பந்தமான விரிவுரைகள் நேற்றுமுன்தினம்(13) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட இவ்வறிமுக நிகழ்வு இணைய வழி சூம் தொழில்நுட்பத்தின் கீழ் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆய்வு முறையியல் விரிவுரைகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட முதல் நாள் விரிவுரையினை கலாநிதி மற்றும் முதுதத்துவமாணி ஆய்வுக் கற்கைகள் மாணவர்களுக்காக மேற்கொண்டார்.

வார இறுதி நாட்களில் தொடர்ச்சியாக ஆறு வாரங்கள் ஆய்வுக் கற்கை மாணவர்களுக்காக இடம்பெறவுள்ள இவ் ஆய்வு முறையியல் தொடர்பான விரிவுரைகள் தலைசிறந்த முன்னணி கல்வியலாளர்கள் மூலம் நிகழ்த்தப்படவுள்ளதாக மொழித்துறை தவிசு பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தெரிவித்தார்.

தொடராக இடம்பெறவுள்ள விரிவுரைகள் வரிசையில் எதிர்வரும் வாரங்களில் பேராசிரியர் கலிங்க ரியுட்டர் சில்வா, பேராசிரியர் கே.ஏ.பி.சித்தசேன, பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எம்.எம்.பாசில், கலாநிதி தம்மிக ஹேரத், கலாநிதி றஸாக் கனி உள்ளிட்ட தலைசிறந்த கல்வியலாளர்கள் விரிவுரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உரையாற்றுகையில், தென்கிழக்குப் பிராந்தியத்தில் உருவாக்கம் பெற்ற இப்பல்கலைக்கழகம் 25 வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. இக்காலப் பகுதியில் பல்வேறான சாதனைகளை இப்பல்கலைக்கழம் மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில், கலாநிதி மற்றும் முதுதத்துவமாணி தொடர்பான கற்கை நெறி ஆய்வுக் கற்கை மாணவர்களுக்காக விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்மை இப்பல்கலைக்கழகத்தின் மற்றுமொரு மைல்கல்லாய் பார்க்கப்படுகின்றது. சுமார் எண்பதிற்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் கலந்து கொண்டு துறைசார் ஆய்வுகளை முன்வைக்கவுள்ளனர் என ஆய்வுச் செறிவு மிக்க உரையினை ஆற்றினார்.

# வவுணதீவில் 6 அடி 4 அடி உயரங்களுடைய கஞ்சா செடிகளுடன் பெண் ஒருவர் கைது

(வவுணதீவு எஸ்.சதீஸ்)



மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் கஞ்சா செடியினை வளர்த்து வந்த பெண் ஒருவர் கஞ்சா செடிகளுடன் சனிக்கிழமை (13) கைது செய்யப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள வாழைக்காலை கிராமத்தில் பெண் ஒருவர் தனது காணிக்குள் வளர்த்து வந்த 6 அடி மற்றும் 4 அடி உயரமுடைய இரு கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரின் காணி உரிமையாளரான பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்

வவுணதீவு பொலிஸாருக்கு கிடைத்த இராசிய தகவலுக்கமைவாக மேற்கொண்ட நடவடிக்கையின்போது இக் கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஜீ.எஸ். பிரியங்கர தெரிவித்தார்.

# கோரோனாவால் இழந்தகல்வியை மீட்க சர்வதேச ரோட்டரி கழகம் உதவி





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கொரோனாவால் இழந்தகல்வியை மீட்க இரண்டாம்கட்டமாக பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு சர்வதேச றோட்டரிக்கழகம் கற்றல்உபகரணங்களை வழங்கிவருகிறது.

சர்வதேச றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளை இரண்டாம் கட்டமாக கல்முனை அல்மிஸ்பா மகாவித்தியாலயம் காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம் ஆகிய இருபாடசாலைகளுக்கு நேற்று கற்றல்உபகரணங்களை வழங்கியது.

கல்முனை அல்மிஸ்பா மகாவித்தியாலயத்தில் 20ஆதரவற்ற குழந்தைகளுக்கும் 15 மாற்றுத்திறனுள்ள குழந்தைகளுக்கும் வழங்கிவைக்கப்பட்ட அதேவேளை காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி உதவிபெறும் மற்றும் தேவையான மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

பாடசாலை பைகள் அப்பியாசக்கொப்பிகள் சப்பாத்துகள் வெப்பமானி உள்ளிட்ட உபகரணங்கள் இதில் அடங்குகின்றன.இதற்கென 2லட்சத்து 40ஆயிரம் ருபா செலவு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வில் றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளைத்தலைவர் றோட்டரியன் த.புஸ்பராசா செயலாளர் றோட்டரியன் எம்.சிவபாதசுந்தரம் முன்னாள் தலைவர்களான றோட்டரியன் எம்.சிதம்பரநாதன் றோட்டரியன் வி.குகதாஸ் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

சர்வதேச றோட்டரிக்கழகத்தின் கல்முனைக்கிளை அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு 10லட்ச ருபா பெறுமதியான கற்றலுபகரணங்களை வழங்கிவருகிறது.

அதன் ஓரங்கமாகவே இவ் விரு பாடசாலைகளுக்கு இரண்டாம் கட்டமாக இவ்வுதவி வழங்கப்பட்டது.

அங்கு கல்முனை றோட்டரிக் கழக செயலாளர் றோட்டரியன் எம்.சிவபாதசுந்தரம் உரையாற்றுகையில்:

அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு 1.1மில்லியன் ருபா பெறுமதியான கற்றலுபகரணங்களை வழங்கிவருகிறது.

அவுஸ்திரேலியா நாட்டு கன்பரா றோட்டரிக்கழகம் இவ்வுதவிக்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தது.

முதலாம்கட்ட விநியோகத்தின் அங்குரார்ப்பண விழா சம்மாந்துறை வலயத்திலுள்ள நாவிதன்வெளிக்கோட்டத்தின் அன்னமலை சிறிசக்தி வித்தியாலயத்தில் கடந்தமாதம் கோலாகலமாக நடைபெற்றது.

நாவிதன்வெளிக்கோட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய அன்னமலை சிறிசக்தி வித்தியாலயம் குடியிருப்புமுனை சண்முகா வித்தியாலயம் வீரச்சோலை மகாவித்தியாலயம் ஆகிய 3 பாடசாலைகளின் 187 மாணவர்களுக்கான கற்றலுபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

பாடசாலை பைகள் அப்பியாசக்கொப்பிகள் சப்பாத்துகள் மழைக்கோர்ட் வெப்பமானி உள்ளிட்ட உபகரணங்கள் இதில் அடங்குகின்றன.இதற்கென 3லட்சத்து 30ஆயிரத்து 400ருபா செலவு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக இழந்தகல்வியை மாணவர்கள் தங்குதடையின்றி மீளப்பெற்று நற்பிரஜைகளாக வரவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். என்றார்.

# மட்டக்களப்பில் நனோ நைட்ரஜன் திரவப் பசளை தொடர்பில் இந்திய பிரதிநிதிகள் விளக்கம்





க.ருத்திரன்

மட்டக்களப்பு வாழைச்சேனை கமநலசேவை பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நனோ நைட்ரஜன் திரவப் பசளை தொடர்பில் இந்திய பிரதிநிதிகள் விளக்கம் அளிக்கும் நிகழ்வு வாழைசேனை கமநல சேவை திணைக்களத்தில் நடைபெற்றது.

கமநலசேவை பெரும்பாக உத்தியோகஸ்த்தர் எம்.ஏ.ரசீட் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஐ.எவ்.எவ்.சீ.ஓ. இந்திய நிறுவனத்தின் விவசாய சேவைப்பிரிவின் தலைமை அதிகாரி டாக்டர் ரெருண்டு சிங் குறித்த நிறுவணத்தின் இந்திய பிரதிநிதிகள் இவ் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கு பற்றியிருந்தனர்.

இதன்போது விவசாயிகளுக்கு நனோ நைட்ரஜன் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.இதனையடுத்து வாழைச்சேனை கமநல சேவை பிரிவிற்குட்பட்ட அடம்படி வட்டவான் வயல் பிரதேசத்தில் நனோ நைட்ரஜன் திரவப் பசளை விசிறல் நடவடிக்கை முன்னெடுக்கபட்டது.

இவ் நனோ நைட்ரஜன் வயல் வெளியில் விசிறும்போது பாதுகாப்பு அங்கி பயன்படுத்த தேவையில்லை என்றும் காற்றில் வேகம் அதிகரிக்கும் போது முகக்கவசம் அணியவேண்டும். பாதுகாப்பானது என்று விளக்கமளிக்கட்டது. இதற்கான விலை விபரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இந்தியாவில் 14 விவசாய ஆரட்சி பல்கலைக் கழகங்கள் 14 ஆயிரம் விவசாயிகள் மத்தியிலும் 94 வகையான பயிர் வகைகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதிக விளைச்சலை பெற்றுக்கொண்டதாகவும் பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

# சாதனைபடைத்த கிரிக்கட் மகளிர் அணியை பாராட்டிய பிரதேசயேலாளர்!



இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் 33வது தேசிய விளையாட்டுவிழா வையொட்டி, அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பெண்களுக்கான கிரிக்கட் போட்டியில் திருக்கோவில் பிரதேசசெயலக மகளிர் அணி முதலாமிடம் பெற்று வெற்றிவாகை சூடி தேசியப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.அதற்காக, திருக்கோவில் இளைஞர்சேவை அதிகாரி கே.பிரபாகரன் ஏற்பாட்டில் சாதனைபடைத்த திருக்கோவில் அணித்தலைவி முத்துராமன் பிருந்தா (தாண்டியடி) தலைமையிலான கிரிக்ட் அணியினரை திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டியபோது எடுத்த புகைப்படம் இது.

படம்..(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

# மட்டக்களப்பு சாரணர் சங்கத்தின் சாரணர்கள் 26 பேருக்கு ஜனாதிபதி சாரணர் விருது அணிவிக்கும் நிகழ்வு

























(சுமன்)

இலங்கை சாரணர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட சாரணர் இயக்க உறுப்பினர்களுக்கு சாரணர் இயக்கத்தின் அதியுயர் விருதான ஜனாதிபதி சாரணர் விருது அணிவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் வி.பிரதீபன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.



இந்நிகழ்வில் இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதான ஆணையாளர் ஜனபிரிட் பெர்னான்டோ, மாவட்ட அரசாங்க அதிபரும், மட்டக்களப்பு சாரணர் சங்கத்தின் தலைவருமாகிய கே.கருணாகரன், மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி, மாவட்ட உதவி சாரணர் ஆணையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியார்கள், கல்விப் புலத்தினர் சாரணர் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எட்டு பாடசாலைகளைச் சேர்ந்த விருதுக்கு தகுதி பெறும் 26 மாணவர்களுக்கு இதன்போது ஜனாதிபதி சாரணர் விருது இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதான ஆணையாளரால் அணிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பாலத்திலிருந்து பாய்ந்த பெண் சடலமாக மீட்பு





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நகர் புறத்தில் அமைந்துள்ள கோந்தப்பிட்டி கடற்கரையில் ஒரு பெண்ணின் சடலம் ஒதுங்கியுள்ளது. இனம் காட்டப்படாத நிலையில் இருக்கும் இவ் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின் உறவினர்கள் இனம் காணுவதற்காக மன்னார் பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கும்படி மன்னார் மரண விசாரனை அதிகாரி குணக்குமார் பொலிசாருக்கு உத்தரவு வழங்கியுள்ளார்.

மரண விசாரனையில் இது தொடர்பாக தெரியவருவதாவது;

11.11.2021 அன்று பேசாலை பகுதியைச் சேர்ந்த பணங்கட்டுகொட்டு பகுதியில் திருமணம் செய்துள்ள ஒரு பேசாலை தபாலக அரச ஊழியர் தனக்கு நேரம் கிடைக்கும்போது மன்னார் பாலத்தடியில் பின்னேரங்களில் தூண்டிலில் மீன் பிடிப்பது வழமை எனவும் சம்பவம் அன்று பிற்பகல் ஆறு மணியளவில் இவ் நபர் பழைய பாலத்தடியிலிருந்து இவ்வாறான செயல்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபொழுது புதிய பாலத்திலிருந்து ஒரு பிள்ளை கடலுக்குள் குதித்ததை; கண்டுள்ளார்

உடனே இவர் 119 க்கு தொடர்பு கொண்டு பொலிசாருக்கு இவ் தகவலை வழங்கியுள்ளார். உடனே பொலிசார் மற்றும் கடற்படையினர் அவ்விடத்துக்கு வருகை தந்ததாகவும் ஆனால் அவ் சமயம் இருள் சூழ்ந்த காணப்பட்டதால் கடலுக்குள் பாயிந்தவரை உடன் கண்டு பிடிக்கவில்லையென தெரிவிக்கப்பட்டது.

பின் கடற்படையினர் இவரை கடலில் தேடியபோதும் இவ் சடலம் 13.11.2021 அன்று கோந்தப்பிட்டி கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

இவ் சடலத்தை அடையாளம் காட்டுவதற்காக ஏற்கனவே முறைப்பாடு எடுக்கப்பட்டிருந்த கண்கண்ட சாட்சி வரவழைக்கப்பட்டிருந்தபொழுது இவர்தான்; குதித்தவர் எனசடலத்தை அடையாளம் காட்டியுள்ளார்.

இவர் அணிந்திருந்த உடுப்பை வைத்துக் கொண்டு அதாவது சிவப்பு பாய்சூட் கறுப்பு ஜீன்ஸ் இவற்றை வைத்து இவர்தான் அந்த நபர் என தெரிவித்துள்ளார்.

இறந்தவர் ஆடை தொழிற்சாலையில் வேலை பார்ப்பவர் என பொலிசாரின் ஆரம்ப விசாரனையில் தெரிய வந்துள்ளபோதும் மரண விசாரனை நடைபெற்ற வரைக்கும் இறந்தவரை அடையாளம் காட்டுவதற்கு உறவினர்கள் எவரும் வரவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மரண விசாரனை அதிகாரி குணக்குமார் மரண விசாரனையை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதுடன் உறவினர்களால் அடையாளம் காட்டப்படுவதற்காக சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கும்படியும் பொலிசாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

தற்பொழுது மன்னார் பொலிசார் இது தொடர்பாக புலன் விசாரனையை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கி வைப்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலையில் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு தமது ஜீவனோபாய முன்னெடுத்துச் செல்வதற்காக மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பசுமையான திருகோணமலை அமைப்பின் அமைப்பாளர்களான கிருபாகரன் அசோகன் மற்றும் என் ராஜேந்திரன் ஆகியோர் தலைமையில் இலவசமாக இவ் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் அமைந்துள்ள ஈஸ்வர புரம் கிராமத்தில் பெண்கள் தலைமை தாங்கும் 10 குடும்பங்களுக்கு தென்னை, பலா, கொய்யா மற்றும் தேசி ஆகிய மரக்கன்றுகள் பசுமையான திருகோணமலை அமைப்பினரினால் வழங்கிவைக்கப்பட்டது.





இந்நிகழ்வில் பசுமையான திருகோணமலை அமைப்பின் உறுப்பினர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்மெட்டியவில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழப்புக்கு காரணமான சந்தேக நபர் விளக்கமறியலில்

(எப்.முபாரக் )

திருகோணமலை தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்தமைக்கு காரணமாக சந்தேக நபர் ஒருவரை இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது நேற்று உத்தரவிட்டார்.

கல்மெட்டியாவ, உல்பத்வெவ பகுதியில் கடந்த புதன்கிழமை(10) இரண்டு காட்டு யானைகள் இறந்து கிடந்தன.

பரிசோதனை முடிவுகளின் படி மின்சாரம் தாக்கி இறந்துள்ளதாக வைத்திய அறிக்கைகள் கிடைக்கப்பெற்றன. இதன்படி தம்பலாகாமம், கல்மெட்டியாவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வேளாண்மைக்கும், தோட்டப்பயிர்ச் செய்கைகளுக்காக வைத்த மின்சாரத்தில் சிக்குண்டு இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் அடிப்படையில் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# சாய்ந்தமருதில் பாராட்டி கௌரவிக்கும் விழா







( காரைதீவு நிருபர் சகா)

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் அதிபர் யு.எல். நஸார் தலைமையில் ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத்தின் ஓய்வு நிலையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், பிரியாவிடை பெற்றுச் சென்ற முன்னாள் அதிபர் எம்.எஸ்.எம். பைசாலை கௌரவிக்கும் நிகழ்வும் மிகச் சிறப்பாக பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். சாகிர், கௌரவ அதிதியாக கல்முனை கல்வி வலய கணக்காளர் ஹபிபுல்லா, விசேட அதிதியாக முன்னாள் அதிபர் மஜீத்தின் புதல்வர் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா மற்றும் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர்கள் பாடசாலை நிறைவேற்று குழு உறுப்பினர்கள் பிரதி அதிபர் றிப்கா அன்ஸார், உதவி அதிபர்கள், பகுதி தலைவர்கள் ஆசிரியர்கள் ஆசிரியைகள் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நிந்தவூரின் வீதி அபிவிருத்திக்கு 110 மில்லியன் ஒதுக்கீடு

(நிந்தவூர் நிருபர்)

அரசாங்கத்தினால் தேசிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டு வரும் ஒரு லட்சம் கிலோமீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான பாரிய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் சுமார் 110 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக ஸ்ரீ லங்காசுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சின் பொது மக்கள் உறவுகள் மேம்பாட்டு அதிகாரியுமான எம்.எம்.எம்.சஹீல் ஜே.பி. தெரிவித்தார்.

இவ் அபிவிருத்தி திட்டத்தில் முதற்கட்டமாக அட்டப்பள்ளம் பெரிய தோட்ட வீதியின் அபிவிருத்திப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் (13) ஸ்ரீ லங்காசுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சின் பொது மக்கள் உறவுகள் மேம்பாட்டு அதிகாரி எம்.எம்.எம்.சஹீல் ஜே.பி. அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கௌரவ பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ச அவர்களின் பணிப்புரைக்கமைய தேசிய ரீதியில் அமுல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கமைய நிந்தவூர் செங்கப்படை வீதி 03 கிலோமீட்டர், அட்டப்பள்ளம் பெரிய தோட்ட வீதி 02 கிலோமீட்டர் , தியேட்டர் வடக்கு வீதி 600M மீட்டர் நீளமான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் கௌரவ விமலவீர திஸாநாயக்க அவர்களின் செயலாளர் அஞ்சன திஸாநாயக்க, கே. எல். எம். பாரூக் மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் சாறுக் மற்றும் நாசிர் மாஸ்டர் மற்றும் முபாசீர் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# உப்புவேளி போலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து கிராம் ஹேரோயின் போதைப் போருளை வைத்திருந்த பேண்ணோருவர் விளக்கமறியலில்

( எப்.முபாரக் )

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து கிராம் ஹேரொயின் போதைப் பொருளை வைத்திருந்த பெண்ணொருவரை இம்மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சனிக்கிழமை (13) உத்தரவிட்டார்.

சுமேதகம, கண்டி வீதி, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஹேரொயின் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாக உப்புவெளி போதைப் பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய ஐந்து கிராம் ஹேரொயின் போதைப்பொருளுடன் கைது செய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் (வாசஸ்தலம்) முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# டிப்பர் -ஆட்டோ விபத்து: ஓட்டமாவடி பிரதேச சபை சாரதி படுகாயம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

டிப்பர் வண்டியும் ஆட்டோவும் மோதியதில் ஓட்டமாவடி பிரதேச சபையில் பணிபுரியும் சாரதி ஒருவர் படுகாயமடைந்த சம்பவமொன்று சனிக்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி பிரதான வீதியில் வைத்து இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியால் பிரதேச சபை சாரதி ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த போது பின்னால் வந்த டிப்பர் வாகனம் ஆட்டோவை முந்திச் செல்ல முற்பட்ட போதே இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. ஆட்டோவில் சென்ற நபர் குறித்த விபத்தில் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உப்புவேளியில் வாகன விபத்து: ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளிஅபயபுர பிரதான வீதியில் வேனுடன் மோட்டார்சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இவ்விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

நிலாவெளியில் இருந்து மார்பிள் பீச் செல்வதற்காக கண்டிஅலவத்துக்கொட பிரதேசத்தில் இருந்து சுற்றுலா வந்த இளைஞர்கள் பயணித்துக்கொண்டிருந்த வேன் ஒன்றுடன் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றதாகவும் உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் திருகோணமலை மூன்றாம் கட்டை ,புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# பலரும் அறிந்திடா அதிசயத்தீவு

உலகளாவிய ரீதியில் மிகவும் வருமானம் ஈட்டக்கூடிய துறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது ஒரு நாட்டிற்கு சுற்றுலாத்துறை மூலம் நேரடி மற்றும் மறைமுக நன்மைகள் காணப்படுவதால் இத்துறை பெருமளவு முக்கியத்துவம் பெற்று வருகின்றது இதற்கு மிக முக்கிய புள்ளியாக அமைந்தது சுற்றுலா மையங்களாக ஒரு சுற்றுலா மையம் சுற்றுலா துறையின் அடிப்படையாக நோக்கப்படுகின்றது இதனாலேயே பல்வேறு நாடுகளும் தம் நாடுகளில் காணப்படுகின்ற சுற்றுலா மையங்களை விருத்தி செய்வதில் மும்முரம் காட்டி வருகின்றனர் ஏனெனில் சுற்றுலா மையங்கள் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடியதாக அமைகின்ற போது அதனை நாடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது

அந்த வகையில் உலக நாடுகளைப் போன்றே இலங்கையும் சுற்றுலாப் பயணிகளைக் கவர கூடிய பல்வேறு அம்சங்களை இயற்கையாகவே கொண்டுள்ளது. இலங்கையின் புவியியல் அமைப்பு, கால நிலை, இயற்கை நீர் நிலைகள், தொல்லியல் மற்றும் வரலாற்று எச்சங்கள், பாரம்பரிய உரிமைகள் என்பன பெருமளவான சுற்றுலாப் பயணிகளை கவர்கின்ற இடங்களாக காணப்படுகின்றன. இவ்வாறாக இலங்கையில் இயற்கை மற்றும் செயற்கையாக அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையங்கள் இந்நாட்டில் சுற்றுலா துறையின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பினை வழங்குவதை காணமுடிகின்றது.

இவ்வாறாக இலங்கையின் வடபகுதியிலும் சுற்றுலா பயணிகளை கவர கூடிய பல்வேறு சுற்றுலா மையங்கள் காணப்படுகின்ற போதும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படுகின்ற குறிப்பாக தென் இலங்கையில் காணப்படுகின்ற சுற்றுலா மையங்களுக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவங்கள் வட இலங்கையில் காணப்படுகின்ற சுற்றுலா மையங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்பதே நிதர்சனம்.

இவ்வாறு வட இலங்கையில் காணப்படுகின்றதும் பெருமளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத, பலரால் அறியப்படாத ஒரு சுற்றுலா மையம் ஆகவே சாளம்பன் தீவு எனும் பிரதேசம் காணப்படுகின்றது. ஒரு சிறிய தீவாக காணப்படும் சாளம்பன் தீவு யாழ் மாவட்டத்தின் தென்மராட்சிப் பகுதியில் கச்சாய் எனும் கிராமத்தில் அமைந்து காணப்படுகின்றது. இது கச்சாய் துறைமுகத்திலிருந்து 2 லீ கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்து காணப்படுகின்றது. முற்றிலும் கடலால் சூழப்பட்ட இத்தீவானது பல்வேறு பழமையையும் தொன்மையையும் தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது.

இத்தீவு குறித்து புராண கதைகளும் செவிவழிக் கதைகளும் அப்பிரதேச மக்களிடையே காணப்படுகின்றது. அதாவது இராமாயணத்திலே யுத்தத்தின் போது மூர்ச்சையுற்று விழுந்த இலக்குவனனை காப்பாற்ற ஆஞ்சநேயர் மூலிகை மலையை குடைந்து வந்தபோது அம்மலையில் இருந்து கடலுக்குள் விழுந்த ஒரு சிறுபகுதி தீவாக மாற்றம் பெற்றது எனக் கூறப்படுகின்றது. இதனைத் தவிர சாளம்பர் உடையார் என்பவருடன் தொடர்பு படுத்திய ஒரு வாய்மொழிக் கதை ஒன்றும் இன்று வரை இப்பகுதி மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

சுற்றிவர ஆழமற்ற கடற்பரப்பால் சூளப்பட்ட இத்தீவினை கடலின் உடைய குளிர்மையும் தென்றலும் இத்தீவினை மேலும் அழகாக்குகிறது.

மணல் தரையில் அமர்ந்து கடலின் உடைய அழகை ரசிப்பதற்கும் இப்பிரதேசம் மிகவும் உகந்ததாக காணப்படுகின்றது. கடல் தொழிலில் ஈடுபடும் மக்கள் பெருமளவில் தீவினைப் பயன் படுத்திக் கொள்வதால் இங்கு கடற்றொழிலில் ஈடுபடும் மக்களுடைய வாழ்வியல் அம்சங்களை நேரடியாக கண்டு கொள்ளவும் முடிகின்றது.

மேலும் இங்கு பாரம்பரிய இந்து மதத்துடன் தொடர்புடைய கிராமியத் தெய்வ வழிபாடும் நடைபெறுகின்ற சிறிய ஆலயம் ஒன்றும் காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் மக்களால் ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் மடை விழா எனும் சடங்கு சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு இவ்வாலயத்தில் தை மாதத்தில் மணவாளக் கோலம், ஆனி மாதத்தில் பொங்கல், புரட்டாதி மாதத்தில் மடை வைத்தல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றது. இதனைத் தவிர தமிழர்களுடைய பாரம்பரிய இந்து வழிபாட்டு முறை யான கலையாடுதல் நிகழ்வும் இங்கு நடைபெறுகின்றது. இன்று பாரம்பரிய வழிபாட்டு மரபுகளும், கிராமிய வழிபாடுகளும் அழிவடைந்து வரும் நிலையில் இக்காலப்பகுதியில் அப்பாரம்பரியங்களும் வழிபாடுகளும் இங்கு பின்பற்றப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

கடலின் முடிவில் வந்து செல்லும் மீன் இனங்களும் ,கடற்கரைகளில் ஊர்ந்து செல்லும் நண்டுகளின் காட்சிகளும், வெளிநாடுகளிலிருந்து வேடந்தாங்கலுக்கு வரும் பறவை இனங்கள் ஓய்வெடுக்கும் காட்சிகளும் சிறப்பானதாக அமைகின்றது. கடலுக்குள் அமைக்கப்பட்டிருக்கும் பனை மரத்திலான பாலம் போன்ற அமைப்புகளில் வெள்ளை நிற கொக்குகளும், மீன் கொத்திகளும் வரிசையாக அமர்ந்திருக்கும் காட்சியும், மாலை நேர சூரிய அஸ்தமனத்தின் உடைய காட்சியும் பார்ப்போரை கொள்ளைகொள்கின்றது .

இத்தனை சிறப்பம்சங்களை இத்தீவு தன்னகத்தே கொண்டு இருக்கின்ற போதும் இதுதொடர்பாக பெருமளவு மக்கள் அறிந்திருக்காமை மிகவும்கவலைக்குரிய அம்சமாகும். இலங்கையில் குறிப்பாக வட இலங்கையில் வாழும் மக்கள் தம்முடைய விடுமுறை காலங்களில் மகிழ்வாகவும் ஓய்வாக இருக்க பல இடங்களுக்கு சுற்றுலா செல்வதை காணமுடிகின்றது. அதிலும் குறிப்பாக தென்னிலங்கை பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்கின்றனர் ஆனால் தென்னிலங்கையில் காணப்படுவது போன்று அழகிய சுற்றுலா மையங்கள் வட இலங்கையிலும் காணப்படுகின்றமை பெருமளவான மக்கள் அறிந்திருப்பதில்லை. அவ்வாறான இடங்களில் இதுவும் ஒன்றாகும். குறிப்பாக இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கே இத்தீவு குறித்த விவரங்கள் தெரிந்திருக்காத நிலைமை மிகவும் கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு இத்தீவினை மக்கள் அறிந்திருக்காமைக்கும் சுற்றுலாப்பயணிகளினுடைய கவனத்தில் கொள்ளப்படாமைக்கும் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதை காணலாம். தீவினை சென்றடைவதற்கு சீரான போக்குவரத்து வசதிகள் காணப்படாமையும் அவ்வாறு துறைமுகம் வரைக்கும் பயணம் செய்தாலும் தீவுக்கு செல்வதற்கு படகுகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அங்கு மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் உதவியுடனே படகில் அங்கு செல்ல முடிகின்றது. இதனால் நினைத்த நேரத்தில் இத்தீவிற்கு பயணம் செய்வது என்பது மிகவும் கடினமானதாகவே காணப்படுகின்றது.

இத்தீவு குறித்து போதிய அளவு விளம்பரப்படுத்தல் இன்றிய நிலை காணப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும். கடலின் நடுவே காணப்படுகின்ற அழகிய சுற்றுலா மையமான இதுகுறித்து இப்பிரதேச மக்கள் குறிப்பாக தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு கூட தெரியாத நிலை காணப்படுகின்றது. 201% ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதிகளிலேயே இத்தீவின் அமைவிடம் குறித்து சுற்றுலாத் துறை அமைச்சகத்தால் கொடிகாமம் பிரதான வீதிக்கரையில் விளம்பரப் பலகை ஒன்று அமைக்கப்பட்டது. எனினும் இன்றுவரை இவ்வாறு ஒரு சுற்றுலா மையம் தம்முடைய பிரதேசத்தில் காணப்படுகின்றதை அறியாத பெருமளவு மக்கள் இங்கு காணப்படுகின்றனர். சாளம்பன் தீவு எனும் பெயரை தற்காலத்தில் ஒரு சில மக்கள் அறிந்துள்ள போதிலும் அதன் அமைவிடம், சிறப்பு, போக்குவரத்து முறை போன்ற விடயங்கள் குறித்து போதிய தெளிவின்மையுடனேயே மக்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலே இவ்வாறு கடலின் நடுவில் காணப்படுகின்ற தீவுகள் மிகவும் குறைவாக காணப்படுவதுடன், அவை பெருமளவான சுற்றுலாப்பயணிகளை கவரும் சுற்றுலா மையங்களாக காணப்படுவதனால் தீவினையும் சிறந்த சுற்றுலா மையமாக மாற்றியமைக்க முடியும்.

இத்தீவுக்கு செல்வதற்கான கடற் போக்குவரத்தினை மேம்படுத்துவதன் மூலமாகவும், படகுச் சேவையை ஏற்படுத்தி முறையாக பயிற்சியும் அனுபவமும் கொண்ட படகோட்டிகளை படகு சேவையில் அமர்த்துவதன் மூலமும், மேலும் துறைமுகப் பகுதிகளில் இருந்து தீவுக்கு செல்ல பாலம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் பெருமளவான சுற்றுலாப் பயணிகளை கவர முடியும். சுற்றுலாப் பயணிகளைக் கவர கூடிய வகையில் ஒய்வு எடுப்பதற்கான ஓய்விடங்களை இங்கே அமைத்தல், உணவுகளை பெறக்கூடிய வகையில் உணவகங்களை அமைத்தல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், மலசலகூட வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளை வரவழைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டுள்ள இத் தீவினை சுற்றுலா மையமாக மாற்றியமைக்கும் எண்ணத்தில் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்ட போதும் இற்றைவரை இச்சுற்றுலா மையம் சிறப்பாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. எனவே வடக்கு மாகாண சுற்றுலாத்துறை, கலாசார மரபுரிமைகள் அமைச்சு என்பன இதனை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் பட்சத்தில் இப்பகுதியினையும் சிறந்த சுற்றுலா மையமாக மாற்றியமைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

க.மதனராஜ்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
4 ஆம் வருடம்





# பிரசவத்திற்குப் பின்னரான நிறைக்குறைப்பு: முக்கியத்துவம் மற்றும் வழிமுறைகள்





ஒரு தாய் குழந்தையை பிரசவித்த பின்னர் உள்ள குறிப்பிட்ட காலப்பகுதி பிரசவத்திற்குப் பிந்தியகாலம் (Postpartum Period) எனப்படும். இக்காலப்பகுதி நான்காவது மூன்று மாதங்களெனவும் (fourth trimester) கருதப்படும். குழந்தை பிறந்த இக்காலப்பகுதி நாளிலிருந்து ஆறு தொடக்கம் எட்டு வாரங்களாக கருதப்படுகின்றது. ஏனெனில் கர்ப்பகாலத்தில் உடற்தொழிற்பாடுகளில் ஏற்பட்ட பெரும்பாலான மாற்றங்கள் இக்காலப்பகுதியினுள் பழைய நிலையை அடைந்துவிடும். தற்போது சில பிரதேசங்களில் இக்காலப்பகுதியை பன்னிரெண்டு வாரங்களாவும் கருதப்படுகின்றது.

## பிரசவத்திற்குப் பின்னரான நிறை குறைப்பின் அவசியம்

கர்ப்பகாலத்தில் தாயில் ஏற்படும் உடல்நிறை அதிகரிப்பு தாய் மற்றும் குழந்தையின்; ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமாகும். சாதாரணமாக ஒரு பெண்ணின் கர்ப்பகாலத்தில் ஏழு தொடக்கம் பன்னிரெண்டு கிலோகிராம் அளவு நிறை அதிகரிப்பு ஏற்படலாம். இருபது சதவீதமான பெண்களில் குழந்தையை பிரசவித்த பின்னர் ஆரம்ப நிறையைவிட 5 கிலோகிராம் அளவு வரை அதிகரித்துக் காணப்படும். கர்ப்பத்திற்கு முன்னர் நிறை அதிகமாகவுள்ள பெண்களில் இந்த நிறை அதிகரிப்பு மேலும் அதிகமாக வாய்ப்புக்கள் உள்ளது.

கர்ப்பகாலம் மற்றும் பிரசவத்தின் பின்னர் பெண்களில் ஏற்படும் நிறை அதிகரிப்பை சாதாரணமானதாக ஏற்றுக்கொள்ளும் தன்மை எமது சமூகத்தில் காணப்படுகின்றது. ஆனால் இது மிகவும் தவறான சிந்தனையாகும். ஏனெனில் ஒருவரில்; அதிகரித்த நிறை தொடர்ந்து காணப்படுமாயின் சலரோகம், உயர்குருதியமுக்கம், மாரடைப்பு மற்றும் சிலவகையான புற்றுநோய்கள் (மார்பகப் புற்றுநோய்இ குடல் புற்றுநோய்) போன்ற தொற்றாநோய்கள் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கும். பிரசவத்தின் பின்னரான நிறை குறைப்பு தாய்க்கு மட்டுமல்ல குழந்தைக்கும் நன்மை பயக்கும். ஏனெனில் ஒரு பெண் அடுத்த கர்ப்ப காலத்தில் நுழையும் போதே அதிக நிறையுடன் காணப்படுவாராயின் அது தாய் மற்றும் குழந்தைக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்.



## பிரசவத்தின் பின்னர் நிறையை குறைக்கும் வழிமுறைகள்

ஒரு தாய் குழந்தையை பிரசவித்த பின்னர் உடனடியாக ஐந்து தொடக்கம் ஆறு கிலோகிராம் அளவு நிறைகுறைவு ஏற்படும். இந்த நிறை குறை, தாயிலிருந்து குழந்தை நஞ்சுக்கொடி மற்றும் சிறிதளவு இரத்தம் வெளியேறுவதால் ஏற்படுகின்றது. குழந்தையை பிரசவித்த தாய்மார்களில் அதிகளவில் சிறுநீர் வெளியேறுவதை (Brisk diuresis) அவதானிக்க முடியும். இது ஆறு மாதங்கள் வரையில் காணப்படலாம். இதனால் தாயில் மேலும் இரண்டு தொடக்கம் மூன்று கிலோகிராம் அளவு நிறைகுறைவு ஏற்படும்.

தாய்ப்பாலூட்டலில் குழந்தை மற்றும் தாய்க்கு பல்லேறு வகைகளில் நன்மைகள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு குழந்தைக்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்கள் வரை தாய்ப்பாலூட்டுமாறு உலக சுகாதார நிறுவனம் மற்றும் இலங்கை குடும்ப சுகாதார பணியகம் என்பன பரிந்துரை செய்கின்றன. தாய்மார்கள் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டும்போது உடலில் கொழுப்பு சேமிக்கப்படும் தன்மை மற்றும் கொழுப்பு இழையங்களின் தொழிற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் பிரசவத்தின்போது அதிகரித்த உடல்நிறை குறைவடைய ஏதுவாக அமையும்.

பிரசவத்தின் பின்னர் தாய்ப்பாலூட்டாத தாய்மார்களைவிட தாய்ப்பாலூட்டும் தாய்மார்களில் அதிகளவான நிறைகுறைவு ஏற்படும் என்பதை உலகில் பல பாகங்களில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள் நிரூபிக்கின்றன. பிரசவத்தின் பின்னர் மருத்துவ ஆலோசனைப்படி உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி என்பவற்றை மேற்கொள்வதால் தாய்ப்பால் சுரக்கும் அளவிலோ குழந்தையின் ஆரோக்கியத்திற்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதையும் ஆய்வு முடிவுகள் நிரூபிக்கின்றன.

தாய்ப்பாலூட்டலை தவிர்த்து பிரசவத்தின் பின்னர் நிறை குறைதல் சாதாரணமாக ஏனையவர்களில் நிறைகுறைதலைப் போன்றதாகும். உணவுக் கட்டப்பாடு மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றை தனித்தனியே மேற்கொள்வதைவிட இரண்டு நடவடிக்கைகளையும் ஒன்றாக செய்யும்போது நிறை குறைவை இலகுவில் அடையமுடியும். துரித உணவுகளை (fast food) தவிர்த்தல் இசைவ (vegetarian diet) உணவை உட்கொள்ளல் மற்றும் weight watchers diet, Mediterranean diet போன்ற உணவுப் பழக்கங்களை பின்பற்றல் போன்றவை நிறைகுறைவை இலகுவாக அடைய வழிவகுக்குமென சில ஆய்வுமுடிவுகள் நிருபிக்கின்றன.

கர்ப்பத்திற்கு முந்தயகாலம், கர்ப்பகாலம் மற்றும் பிரசவத்திற்கு பின்னரான காலத்தில் ஆரோக்கியமான உடல்நிறையை பேணுவதற்கு பின்வரும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளது.

அடிப்படை உணவாக மாப்பொருள் உணவை உட்கொள்ளல் அத்துடன் தீட்டாத தானியங்களை அதிகளவு உபயோகித்தல்.

நார்ச்சத்து உள்ள உணவுகளை அதிகளவு உட்கொள்ளல்.

நாளொன்றுக்கு குறைந்தது ஐந்து பங்குகள் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை உட்கொள்ளல்.

துரித உணவுகள் மற்றும் அதிகளவு சீனி கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை மிகக் குறைந்தளவில் உட்கொள்ளல்.

ஒவ்வொருவேளை உணவையும் தவிர்க்காது உட்கொள்வதுடன் உட்கொள்ளும் உணவின் அளவில் (portion size) கவனம் செலுத்த வேண்டும்.

உட்கார்ந்து இருக்கும் நேரத்தை குறைத்து வேகமாக நடத்தல், சைக்கிள் ஓடுதல், நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்.



ஆரோக்கியமான நிறைகுறைவை அடைவதற்கு வாரமொன்றிற்கு 150 நிமிடங்கள் மிதமான உடற்பயிற்சி செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதனை நாளொன்றிற்கு 30 நிமிடங்களாக வாரத்தின் ஐந்து நாட்களில் செய்யமுடியும். இதனை மேலும் 10 நிமிடங்களாகப் பிரித்து நாளொன்றுக்கு மூன்று தடவைகள் செய்துகொள்ள முடியும். வேகமாக நடத்தல் மற்றும் சமமான தளத்தில் சைக்கிள் ஓடுதல் போன்ற உடற்பயிற்சிகளை செய்வதன் மூலம் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லாமல் சாதாரணமாக சுகப்பிரசவம் மூலம் குழந்தையை பெற்றெடுத்த தாயொருவர் குழந்தை பிறந்த சிலநாட்களின் பின்னர் உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்கலாம். சிசேரியன் முறை மூலம் குழந்தை பெற்றெடுத்த தாயெனின் மருத்துவ ஆலோசனை பெற்றபின்னர் உடற்பயிற்சியை ஆரம்பித்தல் சிறந்ததாகும்.



**வைத்தியர்:**
**ரம்மியா சிவராஜசுந்தரம்**
பயிலுனர் மருத்துவ போசணைப்பிரிவு

# நீரிழிவு நோய் ஒருவரிடம் அடையாளப்படுத்தப்பட்ட பின்பு அவை முற்றுமுழுதாக குணப்படுத்துவது சற்று சவாலான விடயமாகும்

## சர்வதேச நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் விஷ்ணு சிவபாதம் வழங்கிய நேர்காணல்;

**? சர்வதேச நீரிழிவு நோய் தினம் கொண்டாடப்படுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?**

நீரிழிவு நோய்பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக 1991 ஆம் ஆண்டு தொடக்கம் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் உலகளாவிய ரீதியில் வருடம்தோறும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி சர்வதேச நீரிழிவு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் 463 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும்இ அதேபோல் குறித்த வருடத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4.2 மில்லியன் பேர் இறந்துள்ளார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாகஇ கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் இத்தருனத்தில் உலக நீரிழிவு தினத்தில்இ அவர்களைப் பாதுகாத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் சுகாதாரத்துறையினர் பாரிய பங்களிப்பைச் செய்தும் வருகின்றனர்.

வருடம்தோறும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கையும்இ உழிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஏனென்றால்இ எமது வாழ்க்கை முறையில் ஏற்படுத்திக்கொண்ட உணவுப் பழக்கவழக்க மாற்றங்கள் மூலமாகவும்இ நீரிழிவு போன்ற தொற்றா நோய்களின் எண்ணிக்கையின் அளவும் எமது சமூகத்தில் மிக பாரதூரமாக அதிகரித்துக் கொண்டே செல்வதே இதற்குக் காரணமாக அமைகின்றது. இதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் வருடம்தோறும் இத்தினம் தொண்டாடப்படுகின்ற அதேவேளை மக்களிடத்தில் நீரிழிவு நோய்பற்றிய விழிப்புணர்வுகளும் செய்யப்படுகின்றன. எனவேஇ நாம் அனைவரும் நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை அறிந்துகொள்வதன் மூலம் அதன் தாக்கத்தலிருந்தும் எம்மை பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதும் இதன் நோக்காக இருக்கின்றது.



**? நீரிழிவு நோய் ஒரு நோயல்ல என்று சொல்லப்படுகின்றதே இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

நீரிழிவு நோய் ஒரு நோயல்ல என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால்இ நீரிழிவு ஒரு நோயாகும். இந்த நோய் உடலிலுள்ள பல பாகங்களை பாதிக்கின்ற ஒரு நோயாகக் காணப்படுகின்றது. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் நீரிழிவுக்குரிய மருந்துகளையோ அல்லது இன்சுலினையோ தொடர்ச்சியாகவும்இ கிரமமாகவும் பயன்படுத்துவதன் மூலம் சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். தவறும் பட்சத்தில் உடலின் பல பாகங்களை செயலிழக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாக வேண்டிவரும். நீரிழிவு நோயை வருமுன் காப்பதும்இ வந்த பின் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் மருத்துவர்களின் பிரதான அறிவுறுத்தலாக இருக்கின்றது. நீரிழிவு நோய் என்பது உடலில் சதயீ எனும் பாகத்திலிருந்து சுரக்கப்படும் இன்சுலினின் அளவு குறைவதினாலோ அல்லது அவ்வாறு சுரக்கப்படும் இன்சுலினுக்கு உடற்பாகங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாலேயோ ஏற்பட்ட ஒரு நாற்பட்ட நோயாகும்.

நீரிழிவு நோயை முக்கியமாக இரண்டு வகையாக வகைப்படுத்தலாம். அதன் முதலாவது வகைஇ உடலிலிருந்து சுரக்கப்படும் இன்சுலினின் அளவு குறைவதால் ஏற்படுகின்றது. இரண்டாவது வகைஇ இன்சுலினின் தொழிற்பாட்டிற்கு உடலில் காணப்படுகின்ற எதிர்ப்பினால் ஏற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கர்ப்பகாலங்களில் ஏற்படுகின்ற நீரிழிவு நோய்இ சில மருந்துவகைகளினால் ஏற்படுகின்ற நீரிழிவு நோய் என பல விதமான நீரிழிவு நோய்களும் எம்மைத் தாக்குகின்றன.

**? பெரியவர்களைவிட சிறுவர்கள் இந்த நோய் பாதிப்புக்குள்ளாகக் காரணம் என்ன?**

நீரிழிவு நோய் பெரியவர்களை பாதித்தாலும் அது சிறுவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். சிறுவர்களுக்கு முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோயே அவர்களை பாதிப்படையச் செய்கின்றது. பொதுவாகஇ அவர்களில் ஏதோ ஒரு காரணத்திற்காக சுரக்கப்படுகின்ற இன்சுலினின் அளவு குறைவடைவதால் அவர்களுக்கு இந்த முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.





அதிகளவு உடற்பருமனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இரண்டாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய்த்தாக்கம் ஏற்படுகின்றது. அன்மைக்காலங்களில் அதிகரித்த எண்ணிக்கையில் இரண்டாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய் சிறுவர்களைத் தாக்குகின்றது. அதாவதுஇ சிறுவர்களின் அதிகரித்த உடற்பருமனால் இன்சுலின் ஓமனுக்கு எதிரான தன்மையை வெளிப்படுத்தும்போது அவர்களை இந்த இரண்டாவது வகை நீரிழிவு நோய் தாக்குகின்றது. இது பெரியவர்களுக்கு ஏற்படும் நோய் வகையைச் சார்ந்ததாகும். வளரும் குழந்தைகள் மிக நீண்ட காலத்திற்கு நீரிழிவு நோயுடன் போராட வேண்டியுள்ளாதால் அவர்களுக்கு நீரிழிவு நோயினால் ஏற்படும் பாதிப்புக்களும் அதிகரித்து காணப்படுகின்றது.



நீரிழிவு நோய் ஒருவரிடம் அடையாளப்படுத்தப்பட்ட பின்பு அவை முற்றுமுழுதாக குணப்படுத்துவது சற்று சவாலான விடயமாகும். ஆனாலும் பொதுமான மருந்துகளையும்இ பொதுமான உணவுப்பழக்க வழக்கங்களையும்இ உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ளும்போது எமது உடலில் காணப்படுகின்ற சீனியின் அளவை ஒரு சீரான நிலையில் பேணுவதன் மூலம் நீரிழிவு நோயினால் ஏற்படுகின்ற பக்கவிளைவுகள் அல்லது பாதிப்புக்களில் இருந்து விடுபடலாம்.

குறிப்பாகஇ நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களின் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நாங்கள் சுகாதாரமான உணவுப் பழக்கவழக்கங்கள்இ மன ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சிகளை செய்வதன் மூலம் எம்மையும் எமது சமூகத்தையும் நாற்பட்ட நோய்த்தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வதன் மூலம் சுகதேகியான ஒரு வாழ்க்கையை வாழமுடியும்.

**? நீரிழிவு நோயாளிகள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்?**

ஒருவர் நீரிழிவு நோயாளியாக அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் அவரின் உடலிலுள்ள சீனியின் அளவை சீரான நிலையில் பேணுதல் வேண்டும். அதற்காக வைத்தியரினால் பரிந்துரைக்கப்படுகின்ற உணவுப்பழக்க வழக்கங்களையும் மற்றும் மருந்து வகைகளையும் கிரமமாக எடுப்பதன் மூலமும்இ உடற்பயிற்சி போன்றவற்றை செய்வதன் மூலமும்இ நீரிழிவு நோயுடன் சேர்ந்து காணப்படுகின்ற உயர் குருதியமுக்கம்இ அதிக கொழுப்பு போன்ற நோய் நிலைமைகளுக்கு சீரான மருந்துகளை எடுப்பதன் மூலமும்இ நீரிழிவு நோயினால் ஏற்படுகின்ற நீன்டகால பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ளலாம். அல்லது நீன்டகால பாதிப்புக்கள் மிக விரைவாக எம்மைத் தாக்குவதை தாமதப்படுத்தலாம்.

**? சிறுவர்களுக்கு எவ்வாறான சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றது?**

முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இன்சுலினை எடுத்துக்கொள்வது மட்டுமே ஒருயொரு சிகிச்சை முறையாக மேற்கொள்ளப்படுகின்றது. அதாவதுஇ அவர்களின் உடலில் இன்சுலின் அளவு குறைவதனால் முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. அதற்கு இன்சுலினே ஒருயொரு மருந்தாக இருக்கின்றது. ஆனால் இரண்டாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மாத்திரைகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

**? இந்த நோய்பற்றி நீங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?**

நீரிழிவு நோயுள்ள ஒருவர் தனது கட்டுப்பாட்டின் மூலம் நோயைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும். இந்த நோயை ஒரு கட்டுப்பாடாக வைத்திருப்பதற்கு முதலில் அந்நோயைப்பற்றி முழுமையாக நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அதாவதுஇ நீரிழிவு நோய் என்ன காரணத்தால் ஏற்படுகிறது. அது மனித உடலை எந்த வகையில் பாதிக்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமல்லாது அனைவரும் அறிந்திருத்தல் வேண்டியது இன்றியமையாதது.

முதலில் நீரிழிவு என்றால் என்ன என்பது பற்றிய சிறிய விளக்கத்தை நாம் எல்லோரும் அறிதிருப்பது மிக முக்கியமாகும். எமது இரத்தத்தில் இனிப்புச்சத்து (குளுக்கோசின் அளவு) வழமையாக இருப்பதிலும் பார்க்க அதிகரிப்பதினாலேயே நீரிழிவு நோய் ஏற்படுகிறது. குளுக்கோஸ் நாம் உண்ணும் உணவிலுள்ள மாப்பொருள் சமிபாடடைந்து குளுக்கோசாக மாற்றப்பட்டு குருதியால் அகத்துறிஞ்சப்படுகிறது. சாதாரண மனிதனின் 100அட குருதியில் 80 – 120அப குளுக்கோஸ் காணப்படுகிறது.

எமது உடல் இயக்கத்திற்குத் தேவையான குளுக்கோஸை எமது உடற் கலங்களுக்குள் உடைக்கப்பட்டுப் பெறப்படுகிறது. குருதியில் உள்ள குளுக்கோஸ் உடற்கலங்களுக்குள் செல்ல உதவுவது உணவுப்பாதையுடன் தொடர்பாக இருக்கும். சதையி (Pancreases) எனும் சுரப்பியால் சுரக்கப்படும். 'இன்சுலின்' (Insulin) எனப்படும் ஓர் ஓமோன் ஆகும். இந்த இன்சுலின் உடலில் தொழிற்படாது விடுவதால் அல்லது இன்சுலின் சுரக்கும் அளவு குறைவதால் குருதியிலுள்ள குளுக்கோஸ் உடற்கலங்களுக்குள் செல்வது தடைப்படும். இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு கூடுகிறது. சாதாரணமாக சிறுநீரகங்கள் (Kidney) குளுக்கோசை சிறுநீருடன் வெளியேற்றுவதில்லை.

**நேர்காணல்:– பைஷல் இஸ்மாயில்**